


# ரமணோதயம்

அக்டோபர் 2021

காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்

விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து
உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 21 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்
அக்டோபர் 2021

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2021


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | வேதாந்த விசாரம் | ஏ.வி. ராஜகோபாலன் | 14 |
| 3 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 26 |
| 4 | சுவாமினி ஆத்மானந்தா | வி. நிரஞ்சன் | 32 |
| 5 | எச்சரிக்கை! எச்சரிக்கை!! | ராம் மோஹன் | 40 |
| 6 | முருகனாரின் "தெய்வ மாலை" சிறப்புமணிகள் | உரைஞர்: ரமணசுந்தரராஜன் | 49 |
| 7 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 52 |
| 8 | இனிவரும் திருநாட்கள் | | 60 |
| 9 | ரமண மையங்களை நோக்கி... | | 61 |
| 10 | செய்திகள் | | 73 |


பின்அட்டைப் புகைப்படம்: சுரேஷ் கைலாஷ்

# ஆசிரியர் உரை

## அப்பொருளும்தானே அவன்

*இந்தப் பிரபஞ்சத்தின் இரு கண்கள் சந்திரனும் சூரியனும் என வேதங்கள் மொழிகின்றன. ஆனந்த ஊற்றாய் வருவது சந்திரன். சித் சக்தியாய் ஒளிர்வது சூரியன். இவை இரண்டுமே இணைந்த பிரம்ம உணர்வாக பகவான் விளங்குகிறார் எனக் காவ்யகண்ட கணபதி முனிவர் தியானிக்கிறார்.*

***நீலாரவிந்த$^{3}$ ஸுஹ்ருதா$^{3}$ சத்$^{3}$ருஙம் ப்ரஸாதே$^{3}$***
***துல்யம் ததா$^{2}$ மஹஸி தோயஜபா$^{3}$ன்த$^{3}$வேன ।***
***ப்$^{3}$ராஹ்ம்யாம் ஸ்தி$^{2}$தௌ து பிதரம் வடமூலவாஸம்***
***ஸம்ஸ்மாரயந்தம் அசலம்தம் அநுஸ்மராம:***

*நீலாம்பர எழிலுடன் குளிர்ந்த சந்திரன்போல் அருள் பொழிபவன்; செந்தாமரையின் உறவினன்போல் ஜ்வலிப்பவன்; வடஆல நிழலில் அத்வைதம் உபதேசிக்கும் தட்சிணாமூர்த்தியை நிகர்த்தவன்; பிறவித் தளையை நீக்கும் அருணமலையாம் பகவானை மனதில் இருத்திப் பணிவோம் என்று வழுத்துகிறார் முனி.*

*மரணத்தை மாற்றும் ரமணமே பகவான். மரணம் என்றால் என்ன? என்ற திருதராஷ்டிரனின் கேள்விக்கு பிரும்மதேவனின் குமாரர் ஸனத் ஸுஜாதர் அளித்த விடையே 'ஸனத் ஸுஜாதீயம்' எனப்படும் மிக உயரிய தத்துவத் தொகுப்பு. மஹாபாரதத்தின் ஒரு பகுதியான இதில் தத்துவ முடிச்சுகள் அவிழ்க்கப்படுகின்றன.*

*ப்ரமாதம் என்ற இச்சொல்லின் பொருள் என்ன? தினசரி வாழ்க்கையில் இதில் நாம் செய்யும் செயலில்*

கவனமின்றி ‘பராக்கு’ பார்க்கின்றோம் என்று வழக்கத்தில் சொல்லும் செயல். அன்றாட வாழ்வில் இதற்கு நாம் உண்மையில் யார் — அதாவது நாம் உடல்-பொருள்-சிற்றறிவு அல்ல. பேரறிவாகிய ‘ஆத்மா’ என்பதை உணராதிருத்தல் என்பதே பகவான் தரும் விளக்கம். நமது பிறப்பின் குறிக்கோளை மறந்து எங்கேயோ போய்க்கொண்டு இருக்கிறோம். பகவானே கூறுவதுபோல் அவரது அவதார நோக்கம் நாம் உண்மையில் யார் என்ற விழிப்புணர்வின் தேவையை, ‘உத்திஷ்ட ஜாகாத!’ என்ற உபநிடதக் கட்டளையை நாம் அறிந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தினை நமக்கு நினைவுபடுத்துவதாகும்.

தலத்தில் புன்புலன் சழக்கில் துன்புறுந்
தவிக்குத் துஞ்சிடும் படிக்குத் தன்னுளம்
தழைக்க...

என்பதே நம் நோக்கமாக இருக்கவேண்டும்.

ஸனத் ஸுஜாதர் இந்த நம் உண்மை நிலையை அறிவதற்கு அடிப்படைத் தேவைகளைக் கூறுகிறார்.

1. ஆன்மிகப் பயிற்சிக்கான சாஸ்திர அறிவு
2. இடைவிடாத முயற்சி
3. வழிகாட்டும் ஆசான்
4. உகந்த காலம்

பகவானோ இவை அனைத்தையுமே ‘நான் யார்?’ என்ற ஒரே தேடலில் அடக்கி விடுகிறார். இதுவே பகவானின் பிரம்மாஸ்திரம். இதுவே சிறைப்பட்டுக் கிடந்த உள்ளுணர்வுகளை ஊடறுத்துச் செல்லும் அஸ்திரம்.

‘நான் யார்?’ என்பது வெறும் அறிவார்ந்த கேள்வி மட்டுமல்ல. இது நமது உடனடித் தேவை. இதுவரை நாம் எந்த விதமான தேடலுமின்றி ஒரு பௌதிக

*மயக்கமான செலுத்திக் கொண்டிருக்கும் வாழ்வின் அடிப்படையையே அசைக்கும் அஸ்திரம்.*

*இந்தப் பிரம்மாஸ்திரம், வேதாந்தத்தில் விவரித்துக் கூறப்படும், ஒன்றன்பின் ஒன்றாக உள்ளுறையும் ஐந்து கோசங்களை நீக்கி உண்மையான நான் யார் என்பதை வெளிச்சமிடுகிறது.*

*முதன்முதலில் அந்தக் கேள்வி பௌதிக உடல் எனப்படும் அன்னமய கோசத்தினைத் துருவியவுடன் அந்த அன்னமயகோஸம் மறைகிறது. அதை அடுத்துள்ள நமது ப்ராண இயக்கத்தைச் செலுத்தும் பிராணமய கோஸம்தான் நானா? என்று வினவும்போது, பிராணமயமும் விடையின்றி மறைகிறது. இந்தப் பிராணமய சரீரத்தைக் கடந்து செல்லும்போது முதலிரண்டு கோஸங்களை எளிதாகக் கடந்தாலும் மனோமயத்தை இந்தக் கேள்வி ஊடுருவ முயலும்போது மனம் இடைவிடாது தலையிட்டு சாதகனது ஆர்வத்தைக் குலைக்க முயல்கிறது. "இத்தகைய ஆராய்ச்சியால் ஒரு பயனும் இல்லை" என்று சாதகனது உற்சாகத்தைக் குலைக்க முற்படுகிறது.*

*இந்த நிலையில்தான் திடமான ஆன்மிக ஈடுபாடு தேவை. வெளிப்புறத் தூண்டலில் இருந்து மனத்தை விலக்கி சலனமற்று தன்னில்தானே ஆழ்ந்து இருக்கப் பயிற்சி தேவைப்படுகிறது. மனத்தினை பிற கவர்ச்சிகளில் இருந்து விலக்கி நுட்பமாக்கி நமது குறிக்கோளிலேயே கவனத்தைப் பதிக்கும்போது மனம் ஒடுங்குகிறது. மனம் அமைதிப்பட்டவுடன் அடிப்படை ஞானம் வெளிப்படுகிறது. அதுவே விஞ்ஞான சரீரம் எனப்படும். இப்போதும் மனம் அமைதியுற்ற நிலையில் தொடர்கிறது. இந்த விஞ்ஞானமய கோஸத்தைத் தாண்டியவுடன் ஆனந்தமய கோஸத்தை அடைகிறோம். இதில் ஒரு விதமான இடைவிடா ஆனந்தம் துளிர்க்கிறது. ஆனால் இதுவும் ஒரு கோஸம்தான்.*

ஒரு உறைதான். இறுதிநிலை அல்ல. இதையே யோக சூத்ரம் 'ரஸவாதம்' எனக் குறிப்பிடுகிறது. இந்த இறுதிக் கோசத்தையும் நமது விசாரணை அஸ்திரம் தகர்த்துச் செல்லும்போதுதான் இறுதியில் நம் கேள்வியான 'நான் யார்' என்பதை அறிகிறோம். இதனை அறிய பகவான் போதிப்பதுதான் 'நான் யார்?' என்னும் விசாரணை.

பகவானின் 'நான் யார்' என்ற கேள்வி நம் விசாரணை முடியும்வரை தொடர்கிறது. அதேசமயம் ஒவ்வொருவரும் நிச்சயம் பின்பற்ற வேண்டும் என்ற கடினமான பாதையை பகவான் வகுக்கவில்லை. அவர் தேடுபவர்க்கு ஓர் உயரிய உதயத்தைக் காட்டுகிறார். தனது தேடலில் தீவிரமாக இருப்பவர்க்கு உன்னதம் விரைவிலேயே அடையப் பெறும். கடோபநிஷதம் கூறும் உயரிய உண்மை என்னவெனில் "பரம்பொருள் யாரைத் தேர்ந்தெடுக்கிறதோ அவனே அதைப்பற்றித் தீவிரமாகச் சிந்திக்கிறான். அதாவது எல்லையற்ற பரம்பொருளைத் தேர்ந்தெடுப்பவன், எல்லையற்ற பரம்பொருளால் தேர்ந்தெடுக்கப்படுகிறான். அந்த ஆன்மிகப் பயணமும் நம் முயற்சியால் மட்டுமே அமைவது அல்ல. வழிகாட்டுபவன் எப்போதும் நம்முடன் இருக்கிறான்.

ஆன்மிக முயற்சி பகுதி நேர முயற்சியாய் இல்லாமல் முழுநேர முயற்சியாக இருக்கவேண்டும். சங்கரர் கூறுவதுபோல், நாம் எது செய்தாலும் அது ஈஸ்வர அர்ப்பணமாகவே இருக்க வேண்டும்.

**யத்[3]யத்கர்ம கரோமி**

**தத் தத்[3] அகி[2]லம் ஶம்போ தவாராத[4]னம்**

**(ஶிவமானஸ பூஜா ஸ்தோத்ரம்-4)**

ஸம்போ! நான் எதைச் செய்தாலும் அவை அனைத்தும் உனது ஆராதனையே ஆகட்டும்.

ஏதோ ஓர் அட்டவணையை வகுத்துக்கொண்டு, ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே ஜபிப்பது அல்ல.

அது பொழுதுபோக்குபோல் ஆகிவிடும். நாம் எது செய்தாலும் அது ஆத்ம சாதனையின் பகுதியாகவே இருக்க வேண்டும்.

மற்ற வழிகாட்டிகளிலிருந்தும் பகவானது உபதேசம் சிறப்பாக விளங்குவது இதில்தான். ஒரு சிறந்த சங்கீத வித்வான் முதலில் தனது தம்பூராவில் ஸ்ருதி சேர்த்துக் கொள்வார். பின் அவர் எது செய்தாலும் எந்தப் பாடலைப் பாடினாலும் அது அந்த ஆதார ஸ்ருதியுடன் ஒத்தே அமையும். அதுபோன்றே பகவான் முதலில் ‘நான் யார்’ என்ற விசாரணையை, ஸ்ருதியாக அமைத்துக் கொள்ளச் சொல்கிறார். பின்னர் நான் என்ன செய்கிறேன் என்பதோ, என்ன சிந்திக்கிறேன் என்பதோ முற்றிலும் அந்தத் தேடலுக்கு இயைந்ததாயும் மாறுபடாமலும் இருக்க வேண்டும்.


பகவான் என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்! இதன் விடை, நான் செய்வது எனது உள்நோக்கிய ஆன்மிகப் பயணத்திற்கு உறுதுணையாய் உள்ளதா அன்றித் தடை செய்கின்றதா என்னும் அளவுகோலே. நம் செயல்கள், எண்ணங்கள் அனைத்தும் இந்த மைய ஆரத்தில் இணைக்கப்பட வேண்டும்.

ஸனத் ஸுஜாதர் கூறும் மூன்றாவது தேவை, குருவின் வழிகாட்டுதல் — பகவான் வழி இதில் ஒரு தனிவழி. பகவான் எவரையும் சம்பிரதாய தீட்சை அளித்து சீடனாய் ஏற்றதில்லை. யாருக்கும் முறையான தீட்சை வழங்கவும் இல்லை. ஆயினும் அவரைத் தனது ஆன்மிகத் தலைவனாக ஏற்ற அனைவருக்குமே ‘தேடாதுற்ற நல் திருவருள் நிதியம்’ எனத் தானாக அருள் வந்து குவிந்தது. அன்னை மீனாட்சியின் அருள்போல, அவரது அருட்பார்வை மூலமே நிகழ்ந்தது.

பகவானே கூறியதுபோல் அவர் நம்மைவிட்டு எங்கும் சென்று விடவில்லை. ஆன்மிகத் தாகம் கொண்ட தன்னை அறிய முற்படும் அனைவரையும்

அவர் வழிகாட்டி அழைத்துச் செல்கிறார். அவர் நமக்காகத் தந்துள்ள அற்புதமான உபதேசத் தொகுதிகள் மிளிர்கின்றன. அவர் யாத்துள்ள ஒவ்வொரு வார்த்தையிலும் அவரது அருளே உறைகின்றது. அது ஒரு மாபெரும் ஞான சக்திப் பொக்கிஷம். அச் சக்திப் பெட்டகத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் நாம் கற்கும் காலை அவரொடு நம்மைப் பிணைக்கின்றது. வேதகாலத்திலிருந்து ரிஷிகள் உச்சரித்த ஒவ்வொரு மந்திரத்திலும், ரிக்கிலும் பகவானது அருட்பெரும் சக்தி பிரசன்னமாகிறது. நம் ஆன்மிக உணர்ச்சியைத் தட்டி எழுப்புகிறது. 'நான் யார்' என்ற மஹா மந்திரமும் இந்தச் சக்தியில் இருந்தே பிரசன்னமாகிறது. அவர் தன்னிடம் வந்தவரைக் கவனிப்பதில் பிரதிபலிக்கிறது. அவர்தம் அடிப்படைத் தேவைகளைக் கவனிப்பதில் அவர் காட்டிய அக்கறை, ஆசிரம எல்லைக்குள் வந்த ஒவ்வொருவருக்கும் உணவு அளிக்கப்பட்டதா, வந்திருப்பவர் தாழ் குலத்தவர், சமுதாயத்தின் கீழ்க்கோடியில் இருப்பவர் என்று உதாசீனப் படுத்தப்படுகிறாரா என்று நோக்கி அனைத்தையும் அரவணைக்கும் பேரன்பு அந்தப் பெரும் ஜோதியில் இருந்து எப்போதும் ஒளிர்ந்துகொண்டு இருப்பதும், தேவிகாலோத்தரத்தில் அவரே கூறுவதுபோல், மனிதர், விலங்குகட்கு மட்டுமல்ல; செடி, கொடிகளையும் அரவணைக்கும் பேரன்பு சக்தி பகவானுடையது. நாரத பக்தி சூத்ரம் கூறுவதுபோல் அவர் அருணாசலம்மீது கொண்ட பக்தியே அனைத்தின்மீது காட்டும் பேரன்பாகக் கனிந்து, அனைத்தையும் உயர்த்தும் சக்தி பொருந்திய காரணி ஆகிறது.

பகவானிடம் நாம் காட்டும் பக்தி அஹேதுக பக்தியாகவே; காரண கார்யமற்ற பூர்ண அர்ப்பணம் செய்யும் பக்தியாகப் பரிணமிக்கும்போது நமது உள்ளார்ந்த மெய்ம்மையின் முழு எழுச்சி நிகழ்கிறது. அடிக்கடி அருணாசலம் வர இயலாது வெளிநாடுகளில்



வாழும் அன்பர்களுக்குக்கூட பகவானின் தாக்கம் ஆழமாகப் பதிந்து நெருக்கம் ஏற்படுகிறது.

திரு. கணேசண்ணா கூறுகிறார், "ஆன்மாவை அறியும் வழி, 'நீ நீயாக இரு!' என்பதே." அவரது 'நீயாக இரு' என்ற நூலில் கணேசண்ணா கூறுகிறார், "ஒளிமிகுந்த இந்த ஞான ஞாயிறு மோனச் சூரியன் நம்மிடையே சாமான்யர்போல வாழ்ந்தார். அவரது வாழ்க்கை ஒரு திறந்த புத்தகமாக இருந்தது. எந்நேரத்திலும் எப்போதும் வேண்டுவோர்க்கெல்லாம் அவர் காணக் கிடைத்தார். அவரது ஆன்மிக ஞானம் மிக இயல்பாக அவரது எளிமையில் பொதிந்து இருந்தது. அவர் ஒப்பாரும்

மிக்காரும் இல்லாதவர். அவர் ஞானம் முழு ஆன்மிக வரலாற்றிலும் ஒப்புகை காண இயலாதது. எத்தகைய ஆன்மிக நாட்டமும் இல்லாத, எந்தச் சாதனையும் செய்வதில் ஈடுபாடே இல்லாத ஒரு சிறுவனிடம் திடீரென ஞான ஊற்று மலர்ந்தது. அதற்குமுன் அவரிடம் எந்த ஆயத்தமும் இல்லை. படிப்படியாக மனத்தை நுண்மையாக்கும் எந்த முயற்சியும் அந்தச் சிறுவனுக்குத் தெரியாது... ஒரு கோணத்தில் பார்த்தால் அதற்கு எந்த முயற்சியும் தேவைப்படவில்லை. மற்றொரு கோணத்தில் பார்த்தால் ஆத்ம விசாரணையில் ஒரே கணத்தில் குவிக்கப்பட்ட எல்லையற்ற ஈடுபாடு (ப்ரக்ஞான கனம்).. அது ஒரு தீப்பொறி. அது நிலையாகத் தொடர்ந்தது எனப் பகவானே கூறியுள்ளார். அந்த ஞானத் தன்னெழுச்சி ஒரு குவியப் பாய்ச்சல் (quantum jump) உலக ஆன்மிக வரலாற்றில் இணையற்றது.

பகவான் தன்னுடைய உரையாடலில் விளக்குகிறார், “அருள்தான் தொடக்கம்; அருள்தான் நடுவும் முடிவும். அருள்தான் ஆன்மா. நாம் தவறாக உடலுடன் அடையாளப்படுத்திக் கொள்வதால் குருவையும் உடலோடு இருப்பதாக எண்ணிக் கொள்கிறோம். ஆனால் குருவின் நோக்கில் குருவென்பது ஆன்மாதான். ஆன்மா ஒன்றே. எனவே ஆன்மாவே குரு. ஆன்மாவில் இருந்தே அருள் சுரக்கிறது. ஆன்மாவுக்கு எதுவுமே அந்நியமானது.”

இதில் ஒரு சிறிய விளக்கம் — ஆன்மாவிடம் நாம் சரணடைய வேண்டும் என்பது மிகவும் நுண்மையான கருத்து. இதை எப்படிச் செயலாற்றுவது? தொடக்கத்தில் நிச்சயமாக நமது குருவிடம் பூர்ண சரணாகதி செய்ய வேண்டும். அருளே வடிவெடுத்து, நமது உள்நோக்கிய பயணத்துக்கு வழிகாட்டும் ஸத்குருவிடம் சரணடைய வேண்டும். அவரது அருட்பார்வை ஒன்றே சாதகனைச் சரியான பாதையில் செலுத்தும்.

முற்றிலும் அத்வைதத்தையே போதித்து எல்லாமே ஒன்றன்றி வேறில்லை என்று அறுதியிட்டுக் கூறும் பகவானே, "குருவிடம் மட்டும் அத்வைத பாவனை காட்டாதே. தீவிரமான குருபக்தி ஒன்றே உனக்கு முன்னேறும் உபாயம்" என்று கூறுகிறார்.

*அத்துவிதம் என்று அகத்துறுக வோர்போதும்*
*அத்துவிதம் செய்கையில் ஆற்றற்க — புத்திரனே*
*அத்துவித மூவுலகத் தாகும் குருவினோடு*
*அத்துவிதம் ஆகாது அறி.*

*(உள்ளது நாற்பது, அனுபந்தம், 39)*

பொருள்: *ஏகமாம் அத்வைத உண்மையை எப்போதும் உள்ளத்தில் உணர்வாயாக. ஆயினும் அதைச் செய்கையில் காட்டாதே. மகனே! மூன்று உலகத்திலும் நீ அத்வைதமாய் அனைத்துமே ஒன்று என்று அறிந்து பழகினாலும் பரமனின் வடிவான குருவுடன் 'நானும் அவரும் ஒன்று' என்ற அத்வைத பாவனையுடன் பழகலாகாது என்ற உண்மையை அறிவாயாக!*

சங்கர பகவத்பாதர் இக்கருத்தினை வலியுறுத்தி தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தில் கூறுகிறார்.

*யஸ்யைவ ஸ்ஃபுரணம் ஸதா3த்மகமஸத்கல்பார்த2கம் பா4ஸதே*
*ஸாக்ஷாத் தத்வமஸீதி வேத3வசஸா யோ போ3த4யத்யாஶ்ரிதான் ।*
*யத்ஸாக்ஷாத்கரணாத்3ப4வேந்ந புனராவ்ருத்திர்*
*ப4வாம்போ4நிதௌ4*
*தஸ்மை ஶ்ரீ கு3ருமூர்த்தயே நம இத3ம் ஶ்ரீ த3க்ஷிணாமூர்த்தயே ॥*

*(தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்-4)*

பகவானின் எழில்மிகு மொழிமொற்றம் இதோ!

*எவன்ஒளி உண்மை இன்மை இயைபொருள் இலங்கு நேரே*
*எவன்அது நீஆனாய் என்று இசைத்துஉணர்த்துவன் சேர்ந்தோரை*
*எவனைநேர் காணின் மீண்டும் இப்பவக் கடல்வீழ் வில்லை*
*தவருறு குருவாம் அந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி.*

ஸத்குருவின் அகிலம் அளாவிய பேருண்மை இந்த ஸ்லோகத்தில் சிறப்புறக் கூறப்படுகிறது.

“எவனது மெய்ப்பொருளானது, மாயப் பிரபஞ்சத்தில் இயங்கும் எல்லாப் பொருளிலும் வியாபிக்கின்றதோ, எவன் தன்னைச் சரணடைந்தவர்களை ‘தத்வமஸி’ என்னும் வேதவாக்கினால் நீயே அது என்று நேராக உணர்த்துகிறானோ, எவனது ப்ரத்யட்ச தரிசனத்தால் சாதகன் பிறப்பு-இறப்பு என்னும் சம்ஸார ஸாகரத்தில் வீழ்வதில்லையோ தவத்தின் உருவாகிய அந்த ஸத்குருவுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கம்.”

அஹங்காரம் முற்றும் அழிந்த இந்தச் சரணாகதியே ‘தன்னைத் தானாக’ அறியச் செய்வது என்று திருக்கழுமலத் தேவாரத்தில் சம்பந்தர் தெளிந்த அத்வைதக் கருத்தைக் கூறுகிறார்.

மெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செய்யும்
அவன் உறையுமிடம்

என்பது சம்பந்தர் பெருமான் கூறும் ஆழ்ந்த அத்வைதக் கருத்து.

திருமூலரும்,

நான்என நீஎன வேறில்லை நண்ணுதல்
ஊனென ஊனுயிர் என்ன உடனின்று
வானென வானவர் நின்று மனிதர்கள்
தேனென இன்பம் திளைக்கின்ற வாறே.

(சம்பிரதாயம்-11)

நான் என்றும் நீ என்றும் நீ வந்து அடைதல் என்றும் வெவ்வேறாகப் பிரித்து உணரும்நிலை துவைதநிலை. இது இறுதியான மெய்நிலை அல்ல. ஜீவனும் சிவனும் உடலும் உயிரும்போல ஒன்றானது. தேனும் அதில் உறைந்துள்ள சுவையும்போல வேறுபடாத ஒன்று.

தானே சிவமான தன்மை தலைப்பட
ஆன மலமும்அப் பாசபே தங்களும்
ஆன குணமும்ப ரான்மா உபாதியும்
பானுவின் முன்மதி போல்பட ராவே (நின்மலாவத்தை-11)

*அத்வைத நிலையை அடைந்து ஜீவன் சிவத்தோடு ஒன்றிய பின்னர் மும்மலங்களும் பல்வேறு பாசங்களும் நம்மைச் சிவனிடமிருந்து பிரித்த உலக அனுபவங்களும் மறைந்து அழிகின்றன. சூரியன் உதித்தபின் நிலவு மறைவதுபோல ஞானம் உதித்தபின் அஞ்ஞானம் தானே மறைகிறது.*

*சீவன் எனச் சிவன் என்ன வேறில்லை*
*சீவனார் சிவனாரை அறிகிலர்*
*சீவனார் சிவனாரை அறிந்தபின்*
*சீவனார் சிவனாய் இட்டு இருப்பரே*

*(ஏழாம் தந்திரம், 23-12)*

*ஜீவனும் சிவனும் ஒன்றன்றி வேறல்ல. ஜீவன் ஆத்ம விசாரணை செய்து நான் யார் என்று அறியும்வரை உள்ளுறையும் சிவனை உணர்வதில்லை. ஜீவனும் சிவனும் ஒன்றன்றி வேறல்ல என்று உணர்ந்தபின் ஜீவன் சிவத்தில் ஒடுங்கும்.*

*பகவான் கூறும் அறியோன்—அறிபொருள்—அறியப் படுதல் (ஞேயம்—ஞாதிரு—ஞானம்) மூன்றும் ஒன்றே என்னும் அத்வைதப் பேருண்மை, காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியில் அழகுற அறிவிக்கிறார்.*

*அறிவானுந் தானே; அறிவிப்பான் தானே*
*அறிவாய் அறிகின்றான் தானே — அறிகின்ற*
*மெய்ப்பொருளும் தானே; விரிசுடர்பார் ஆகாயம்*
*அப்பொருளும் தானே அவன்.*

*(அற்புதத் திருவந்தாதி 20)*

*இதுவே பகவான் எடுத்துரைக்கும் அத்வைதப் பேருண்மை.*

*உரையாடலை மீண்டும் தொடர்வோம்.*

*பகவான் பணியில் தங்கள்,*

*ராம் மோஹன்*

# வேதாந்த விசாரம்

## அத்தியாயம் 1

## ஞானி யார்?

### டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்

ஆரவாரமான சென்னை நகரிலிருந்து ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ளது அந்த வேதாந்த குருவின் ஆஸ்ரமம். மாமரங்களும் இறை வழிபாட்டுக்குத் தேவையான மலர்த்தோட்டமும் அதற்கு ஒரு ஆன்மீகப் பின்னணியை அமைத்துத் கொடுத்தன. குரு இந்திய மேற்கத்திய வேதாந்தத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகள் சரளமாக அறிந்த பன்மொழி வித்தகர். சிஷ்யர்கள் மத்திய வயது கிருஹஸ்தர்கள்; ஆன்மீக நாட்டமுடையவர்கள். வாரம் இருமுறை அங்கு குருவின் உபதேசங்கள் நடைபெறும்

மனோகரமான ஒரு ஞாயிறு மாலைப்பொழுதில் ஞானவிசாரம் நடந்து கொண்டிருந்தது.

குரு கேட்டார், 'இன்று நீங்கள் எதைப் பற்றி அறிய விரும்புகிறீர்கள்?'

**சிஷ்யர்கள்:** நாங்கள் ஞானியின் இலக்கணத்தையும் குண நலன்களையும் பற்றி அறிய விரும்புகிறோம்.

**குரு:** இதைப்பற்றி விரிவாக பகவத் கீதையில் கூறப்பட்டுள்ளது. 'எவன் ஆசைகளை முற்றிலும் நீக்கி, பற்றுகளைத் துறந்து, மனிதனின் முக்கிய எதிரிகளாகிய அகங்காரம் மமகாரம் ஆகியவற்றை விலக்கிச் செயல்படுகிறானோ, அவனே மன சாந்தியை அடைகிறான். அந்த நிலையில் அவன் ஞானத்தைப் பெறுகிறான்.' (2.71)

***சிஷ்யர்கள்:*** *இதை இன்னும் சற்று விரிவாகக் கூற முடியுமா?*

***குரு:*** *பகவத் கீதையின் முக்கிய பகுதியானது ஸ்திதப்ரக்ஞன் என்னும் நிலையை விளக்குகிறது. இது கீதையின் இரண்டாவது அத்தியாயத்தின் இறுதிப்பகுதியில் பதினெட்டு ஸ்லோகங்களில் விளக்கப்படுகிறது. இதற்கு சமநிலை என்று நேராகத் தமிழில் பொருள் கொள்ளலாம். இத்தகையவன் எப்படி இருப்பான் என்று கேட்ட அர்ஜுனனுக்கு, விடைதரும் வகையிலேயே அமைந்துள்ளது இந்தப் பகுதி.*

- ❖ *அவன் துக்கத்தைக் கண்டு துவண்டு போக மாட்டான்; அதேபோன்று சுகத்தைக் கண்டு துள்ளுவதும் இல்லை;*
- ❖ *பயம்-ஆசை-குரோதம் போன்ற உணர்வுகளை அவன் ஒதுக்கியவன்;*
- ❖ *இந்திரியங்களைக் கவரக்கூடிய சுகங்களுக்கு அவன் பலியாக மாட்டான்.*
- ❖ *புலன்களை திசை திருப்பக்கக்கூடிய நிகழ்வுகள் நேரிட்டால், ஆமை தன்னுடைய அவயவங்களை சுருக்கிக்கொள்வதுபோல, அவன் தன் புலன்களை உள்ளே அடக்கிக் கொள்வான்.*

இந்த அற்புதமான ஞானோபதேசம் கீதையின் சிகரமாக கருதப்படுகிறது. இதே போன்ற கருத்துகளை தமிழிலக்கியத்திலும் பார்க்கலாம்.

***சிஷ்யர்கள்:*** *தமிழில் இத்தகைய சிந்தனைகள் எங்கு உள்ளன?*

***குரு:*** *இதன் விளக்கமாகவே அமைகிறது கணியன் பூங்குன்றனாரின் புகழ்பெற்ற புறநானூற்றுப் பாடல்.*

*யாதும் ஊரே யாவரும் கேளிர்*
*தீதும் நன்றும் பிறர்தர வாரா*
*நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன*
*சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்*
*இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே..*

*(புறநானூறு-192)*

ஞானியின் அனைத்து இலக்கணங்களும் இந்த ஒரு பாடலில் இணைந்து இருப்பதைப் பார்க்க முடிகிறது. இந்த மாபெரும் கவிஞன், ஞானியின் குணங்கள் அனைத்துக்கும் ஒரு தெளிவான லிஸ்ட் கொடுத்து விடுகிறான்.

1. அவன் இந்த உலகம் அனைத்தையும் தன்னுடைய ஊராகவே பார்க்கிறான்; அதேபோன்று உலக மாந்தர் அனைவரும் அவருடைய உறவினராகவே காட்சியளிக்கின்றனர். *(யாதும் ஊரே யாவரும் கேளிர்)*

2. நன்மை-தீமை போன்றவை நமக்குப் புறத்தே அமைவது அன்று. நாமே நம்முடைய நன்மை தீமைகளுக்குக் காரணம். இதுவே மேற்கண்ட கீதையின் வாக்கில் கண்ட கருத்தின் சாராம்சம். *(தீதும் நன்றும் பிறர்தர வாரா)*

3. இன்பமும் துன்பமும் பிறரால் தரப்படுவதில்லை. இது முந்தைய கருத்தின் நீட்சி. *(நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன)*.

4. மரணம் என்பது ஒவ்வொரு மனிதருக்கும் விதிக்கப்பட்ட ஒரு முடிவு. அதைக்கண்டு அஞ்சுவதோ அல்லது இன்பமான கணங்களில் துள்ளுவதோ தேவையற்றது. *(சாதலும் புதுவது அன்றே, வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்றும் இலமே)*

*மகாபாரதத்தில் உள்ள 'யக்ஷப்ரஷ்னம்' என்னும் பகுதியில் தருமபுத்திரன் வாய்மொழியாக இதன் விளக்கத்தைப் பார்க்கிறோம். "உலகிலேயே மிகப்பெரிய அதிசயம் என்ன?" என்று யக்ஷன் கேட்கிறான். அதற்கு விடையாக தருமபுத்திரன் சொல்கிறான், "உலகில் உள்ள அனைத்து மாந்தரும் மடிவதைப் பார்த்தும், நான் மட்டும் நிலையானவன் என்று நினைக்கின்றானே, அதுவே மிகப்பெரிய அதிசயம்."*

*முடிவாக, இந்த சங்க காலப் பேரறிஞன் நம் வாழ்க்கைப் பயணத்தை ஒரு சுருக்கமான உதாரணத்தின் வழியே விளக்குகிறான். ஒரு பெரிய ஆறு. அதில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதில் ஒரு தெப்பம் எவ்வாறு அதன் நீரோட்டத்திற்கு ஏற்ப செல்லுவோமோ, அதுபோலவே அமைகிறது நம்முடைய வாழ்க்கையும். இதுவே நம்முடைய முன்னோர்கள் கண்ட மெய்பொருள். ஞான மார்க்கத்திற்குச் சுலபமான விளக்கம்.*

> *குரு:* இந்நிலையில் இவன் செல்வத்தால், புகழால், அல்லது ஏனைய வசதிகளால் சிறியவன், தாழ்ந்தவன் என்று எவரையும் ஒதுக்குவதும் இல்லை; அதேசமயம் செல்வந்தர்கள் வசதிபடைத்தவர்கள், பெரிய பதவிகளில் இருப்பவர்கள் போன்ற செல்வாக்கு படைத்தவர்களைப் புகழ்வதும் இல்லை. *(பெரியோரை வியத்தலும் இலமே, சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே)*
>
> ***சிஷ்யர்கள்:*** *இந்தப் புறநானூற்றுக் கவிதையின் வரிகளைப் படிக்கும்பொழுது, ஒரு உயர்ந்த வேதாந்த அனுபவம் கிடைக்கிறதே. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்னும் தைரியம் உண்டாகிறது*

குரு: இதில் குறிப்பிடத்தக்க மற்றொரு விஷயமும் இருக்கிறது.

ஞானி என்பவன் உலகைவிட்டு விலகி தனிமையில் வாழும் மனிதனாகத்தான் இருக்க வேண்டும் என்னும் தேவை இல்லை. அவன் நம்மிடையே வாழும் ஒரு சாதாரணனாக எளியவனாக இருக்கலாம். ஆயினும்

- ❖ அவன் உள்ளத்தில் எல்லையில்லா அமைதி இருக்கும்.
- ❖ இன்ப துன்பங்கள் அவனை பாதிக்காது.
- ❖ பற்றுகள் நீங்கிய நிலையில் அவன் பலனில் கருத்து இன்றி செயலாற்றிக் கொண்டே இருப்பான்.

## மனத்தை அடக்குதல்

இதை கீதா வாக்கியமாக ஆரம்பத்திலேயே பார்த்தோம். இதுவே நம்முடைய வாழ்வின் அடிப்படையாகும். நாம் மகிழ்ச்சியாக இருப்பதும் துன்பப்படுவதும் மனதின் மூலமாகவே. இந்த மனதின் குணத்தை திருவள்ளுவர் தீவிரமாக ஆராய்ச்சி செய்கிறார். எல்லாமே இரண்டு வகையான தன்மையுடையவை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால் நன்மை-தீமை, இன்பம்-துன்பம், வெற்றி-தோல்வி, நட்பு-விரோதம், இவ்வாறு எல்லாவிதமான உணர்வுகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்ட எல்லைகளில் சஞ்சரிக்கின்றன. இதற்கு இருமை என்று பெயர். இதை அறிந்தவரே உலகில் உயர்ந்தவர் என்பதை வள்ளுவர் வாக்கில் பார்க்கலாம்

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. (23)

இதை வடமொழி நூல்களில் பல இடங்களில் பார்க்க முடிகிறது. இதை 'த்வந்த்வம்' என்று குறிப்பிடுவார்கள்.

*கண்ணன் கீதையில் இதை 'இருமையின் மோகம்' (த்வந்த்வ மோஹேன பாரத) என்று குறிப்பிடுகிறான். நம்மைக் கட்டுப்படுத்தும் இந்தக் கருமம் அனைத்தையும் ஞானாக்னியில் அழித்து (ஞானிக்னி தக்த கர்மாணம்) பேரின்பத்தை அடைய வேண்டும். இதுவே இறுதி நிலை.*

*இதை விளக்குகிறார் அகப்பேய் சித்தர். சிறந்த ஞானியாகத் திகழ்ந்த இவர் பேயாக அலையும் மனதைக் கட்டுப்படுத்தியவர் ஆதலால் அகப்பேய் சித்தர் எனப்படுவர். அவர் 'தன்னை அறிதல்' என்பது பேரின்பப் பெருவாழ்வுக்கு சிறந்த வழிகாட்டி என்பதை விளக்க,*

***தன்னை அறிய வேணும், சாராமற் சாரவேணும்,***
***பின்னை அறிவதெலாம் பேயறிவாகுமடி***

*என்று உரைப்பார். புகழ்பெற்ற மேற்கத்திய தத்துவ அறிஞரான ஸ்பினோஸா இக்கருத்தையே வழிமொழிகிறான். உன்னையும் உன் உணர்வுகளையும் தெளிவாக அறிந்தால், நீ மெய்ப்பொருளின் ரசிகனாகிறாய். The more clearly you understand yourself and your emotions, the more you become a lover of what is. — Spinoza. இந்த அறிவு பெற்றவனே ஞானியாகிறான்..*

*குரு: ஞானியின் குணங்களைப் பற்றி உங்களுக்குத் தெளிவு கிடைக்கிறதா?*

***சிஷ்யர்கள்:** அத்தகைய மகனீயர்களின் லக்ஷணங்களை ஓரளவு புரிந்துகொண்டோம். அவர்கள் எவ்வாறு செயலாற்றுவார்கள் என்று கூற முடியுமா?*

***குரு:** எந்தஒரு அறநெறியில் ஈடுபடும் சமயத்திலும், தடைகளும் தடங்கல்களும் வந்து சேரும். அவற்றைக் கண்டு அஞ்சாமல், நம்*

செயலைவிட்டு ஒதுங்காமல் என்றும் ஞானி தன்னுடைய செயலில் ஈடுபடுகிறான்.

இதற்கு அழகிய விளக்கம் நமக்குக் கீழ்க்கண்ட பாடலில் கிட்டுகிறது.

குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம் 102 பாடல்கள் கொண்ட அருமையான நூல். இதில் வரும் கீழ்க்கண்ட பாடல் அனைவரும் அறிந்ததே. இதில் ஞானியின் கருமமே கண்ணாயினார் என்னும் நிலை பேசப்படுகிறது

**மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி**
**அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்**
**கருமமே கண்ணாயி னார்**

**(53. கருமங் கண்ணாயினார் செயல்)**

செயலாற்றுபவன் உடல் வருத்தம், பசி, தூக்கம், போன்றவற்றை மறந்து பிறர் செய்யும் அவமதிப்பையும் காலத்தின் அளவுகோல்களையும் துறந்து தன் செயலிலேயே கருத்துடையவர் ஆவான். இது ஞானியின் முக்கிய லக்ஷணம்.

**சிஷ்யர்கள்:** இது எல்லோருக்கும் நல்ல வழிகாட்டி. பலருக்கும் இளமையில் இவ்வாறு 'கருமே கண்ணாயினார்' என்று செயலாற்றிப் பொருள் சேர்த்துப் பின்னர் வயதான காலத்தில், வேறு செயல்களில் ஈடுபடமுடியாத பருவத்தில், ஞான விசாரத்தில் விருப்பம் துவங்குகிறது. இதை ஞானிக்கும் பொருந்துமா?

**குரு:** மூப்பு என்பது வயதிற்கு ஒரு அடையாளம் என்பது பரவலான அபிப்பிராயம். அந்த நிலையில் முடி நரைத்து, கை கால்கள் தளர்ந்து, அறிவு மழுங்கும் என்பது நம் கருத்து. ஆனால் சான்றோர்கள் இதை ஏற்பதில்லை.

புகழ்பெற்ற புறநானூற்றுப் பாடல் ஒன்றில் பிசிராந்தையார் என்னும் புலவர் முதிர்ந்த வயதிலும் நரை திரை இல்லாமல் வாழ்ந்ததன் காரணத்தைச் சொல்கிறார். இதே கருத்தினை இனியவை நாற்பது என்னும் பதினெண் கீழ்க்கணக்கு நூல் இரத்தினச் சுருக்கமாகச் சொல்கிறது.

இளமையை மூப்பென்று உணர்தல் இனிதே (37)

இதில் ஆலோசிக்க வேண்டிய முக்கியமான செய்தி ஒன்று இருக்கிறது. இளமைக் காலம் என்பது வெறும் இன்பம் துய்ப்பதற்கான பருவம் என்று பலரும் நினைக்கிறார்கள். அதில் நம் சித்தாந்தமும் வேறுபடுவதில்லை. இளம்பருவத்தில் விஷய சுகங்களை அனுபவித்தல் என்பதை காளிதாசனும் வற்புறுத்துகிறான். (யௌவனே விஷயைஷிணாம் — ரகுவம்சம்)

அதே சமயத்தில் உடலும் உள்ளமும் சுறுசுறுப்பாக இயங்கும் இந்தக் காலகட்டத்தில், வாழ்க்கையின் மெய்ப்பொருளை அறிதலும், அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதும்கூட முக்கியமானதாகக் கருதப் படுகிறது.

இதைத்தான் மேற்கூறிய 'இனியவை நாற்பது' என்னும் நூல் வற்புறுத்துகிறது. வயதான காலத்தில் மெனக்கெட்டுச் செய்வதைக் காட்டிலும் இளமையில் செய்வது மிகவும் சுலபமாக அமையும். இதையே *இனியவை நாற்பது* என்னும் பட்டியலில் சொல்கிறார் சங்ககாலக் கவி. இந்த முறையிலேயே வாழ்க்கையை நடத்திய ரகு வம்சத்து அரசன் நரை திரை மூப்பு இல்லாமல் வயதால் மாத்திரம் வயோதிகம் என்னும் நிலையை அடைந்தான் என்கிறது ரகுவம்ச மகா காவியம் (வ்ருத்தத்வம் ஜரஸா வினா).

முன்பு ‘யௌவனத்தில் விஷய சுகங்களை அநுபவிப்பார்கள்’ என்று சொன்ன அதே கவி, ‘அவர்கள் முதுமைக்கான விவேகத்தை இளமையிலேயே அடைந்தனர்’ என்று சொல்வதும் நோக்கத்தக்கது. இதே கருத்தைத்தான் பிசிராந்தையாரும் வெளிப்படுத்துகிறார்.

**சிஷ்யர்கள்:** இது நல்ல விஷயம்தான். வயதான காலத்தில் புதிதாக எதையும் கற்பது கடினம். அந்த அளவில் இளமையை நாம் அனைவரும் விரும்புகிறோம். ‘ஐ ஃபீல் யங்’ என்றுதானே அனைவரும் சொல்கிறார்கள்.

**குரு:** சரியாகச் சொன்னீர்கள். இதையேதான் உமர் கய்யாமும் சொல்கிறான். *The value of three things is justly appreciated by all classes of men: youth, by the old; health, by the diseased; and wealth, by the needy.* முதியவன் இளமையையும், நோயாளி ஆரோக்கியத்தையும், ஏழை செல்வத்தையும் பெரிதும் போற்றுவான்.

**சிஷ்யர்கள்:** இவ்வாறு செயலாற்றுவதிலேயே மனதைச் செலுத்தினால், ஞானம் எப்படிக் கைகூடும்?

**குரு:** அதற்கு விடைதான் தியானம். இந்திரியங்களை அடக்கி இறைவனை உள்ளே காணும் நிலை.

## தியானம்

தியானத்தின் லட்சணங்கள் பல இடங்களிலும் கூறப்பட்டுள்ளன. அதன் விளக்கமாக கீதையின் தியான யோகம் என்னும் ஆறாம் அத்தியாயத்தில் கண்ணன் கூறுகிறான் (கீதையின் வரிகள் அங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன)

- ❖ *தியானத்தில் ஈடுபட விரும்புபவன் யாராலும் அறியப்படாதவனாக இருப்பான் (ரஹஸி). உண்மையான ஞானி விளம்பரத்தை விரும்பமாட்டான். அதுமட்டுமல்ல, பிறர் பார்க்கையில் துறவிபோல் தியானத்தில் ஈடுபட்டும், தனிமையில் இருக்கையில் சுகங்களை அனுபவித்தும் இரட்டை வேஷம் போட மாட்டான்.*
- ❖ *தியானத்தில் ஈடுபடுகையில் அவன் தான் மட்டும் தனியாக பிரம்மத்தைப் பற்றிச் சிந்திப்பவனாக இருப்பான். இது 'கூட்டுப் பிரார்த்தனை' என்ற தத்துவத்திற்கு விரோதமானது அன்று. நமக்குள்ளே உறையும் இறைவனைக் காண வேண்டுமென்றால் அதற்கென்று சில நியமங்கள் தேவை. அந்தச் சூழலில் தனிமை அவசியம். பின்னர் பிரம்மத்தை அறிந்தவனாகி, அவன் பிறருக்கு அதை உபதேசிக்கலாம் இதையே 'இனிது இனிது ஏகாந்தம் இனிது' என்று ஔவையாரும் பாடினார். (ஏகாகி)*
- ❖ *அவன் தேகத்தைத் தன்னிடம் இருந்து மாறுபட்டதாகப் பார்க்க வேண்டும். உடலுக்கு வரும் இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாதவனாக இருக்கவேண்டும். அதேபோன்று உணர்ச்சிகளைக் கட்டுக்குள் வைத்தவனாக இருத்தல் அவசியம் (யத சித்தாத்மா)*
- ❖ *அவன் உள்ளத்தில் ஆசைகள் விருப்பு வெறுப்புகள் போன்றவை இருக்கக்கூடாது. உயர்ந்த தியான நிலையை அடைந்தவர்கள் கூட, தன்னை மற்றவர்கள் ஞானி என்று போற்ற வேண்டும் என்ற விருப்பத்தை உடையவர்களாக*

*இருப்பார்கள். இது தியானத்திற்கு பெரிய விரோதி. (நிராஸீ:)*

- ❖ *இவ்வாறு தியானம் செய்ய விரும்புபவன், தன்னுடைய உடைமை என்று எதையும் வைத்துக்கொள்ளக்கூடாது. உடைமைகள் என்பவை அவற்றின் மீது பற்றுதலை ஏற்படுத்தும் திறன் படைத்தவை. எனவே உண்மையான தியானம் என்பது உடைமைகளைப் பெருக்குவதிலும் அவற்றைப் பாதுகாத்தலிலும் ஈடுபடாமல், மனதை ஒரு முகப்படுத்துவதிலேயே இருக்க வேண்டும். (அபரிக்ரஹ:)*

*இத்தகைய லட்சணங்கள் கீதையின் ஆறாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன. ஸ்லோகத்தைப் பார்ப்போம்:*

*யோகீ யுஞ்ஜீத ஸததமாத்மாநம் ரஹஸி ஸ்தி2த:*
*ஏகாகீ யதசித்தாத்மா நிராஸீ: அபரிக்3ரஹ: | (6.10).*

*மேலும் அவன் பொன்னையும் கல்லையும் மண்ணையும் சமமாகப் பார்ப்பவன் (ஸமலோஷ்டாஷ்மகாம்சந: 6.8). இத்தகைய சம நிலை மட்டுமே தியானத்திற்கு ஏற்ற வழி.*

*சிஷ்யர்கள்: அப்படி தியானம் செய்ய வேண்டுமானால் ஞானிகள் தங்கள் இருப்பிடத்திலேயே இருந்து கொண்டு வழிபடுவார்களா இல்லை. . .*

*குரு: பொதுவாக அவர்கள் தன்னுடைய ஊர், மக்கள், சொத்து, சுகம் என்னும் பந்தங்களை துறந்து விட்டு, இறைவனை நாடி பல தலங்களை தரிசித்தவாறு பயணம் செய்பவர்.*

*ஞான மார்க்கத்தில் ஈடுபட்ட சங்கரர் போன்ற மகனீயர்கள் பாரததேசம் முழுவதும் விஜய யாத்திரை செய்தார்கள். அவர்களுடைய தேவைகள்*

*அற்பமாக இருந்ததால், எந்த இடம் சென்றாலும் அங்கே கிடைக்கக்கூடிய வசதிகளைக் கொண்டு மனநிறைவோடு வாழ்ந்தார்கள். 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்னும் உயர்ந்த மனப்பான்மையை புறநானூறில் பார்க்கிறோம் (அவ்வையார் 206). இதே கருத்தை நான்மணிக்கடிகையிலும் காணலாம்*

***நல்லார்க்கும் தம் ஊர் என்று ஊர் இல்லை; நன்னெறிச்***
***செல்வார்க்கும் தம் ஊர் என்று ஊர் இல்லை;***

***(நான்மணிக்கடிகை, பாடல் 81)***

*சங்கர பகவத்பாதரும் 'மூவுலகும் என் சொந்த நாடே' என்று மனம் விரிந்து வரைகிறார் ஒரு உலகப்படத்தை. (ஸ்வதேசோ புவனத்ரயம்).*

*இவர்களுடைய தேவைகள் மிகக்குறைவு. அதனால் தான் எந்த இடத்திலும் நிம்மதியாக இவர்களால் வாழ முடியும். இந்த நிலையைச் சற்று விளக்கமாகப் பட்டினத்தார் பாடலில் பார்க்கலாம்.*

***உடைக் கோவணம் உண்டு; உறங்கப் புறந்திண்ணையுண்டு; உணவிங்கு***
***அடைகாய் இலையுண்டு; அருந்தத் தண்ணீர் உண்டு; அருந்துணைக்கே***
***விடையேரும் ஈசர் திரு நாமம் உண்டு; இந்த மேதினியில்***
***வடகோடு உயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கே***

*குரு: இந்தப் பாடலின் பொருள் விளங்குகிறதா?*

*சிஷ்யர்கள்: மிக எளிய சொற்களில் ஞானியின் நிலையை விளக்கி விட்டார். கோவணம் உடை; இருக்கத் திண்ணை; எளிய உணவு; துணைக்கு ஈசன். என்ன ஆனந்தமயமான வாழ்க்கை.*

*குரு: இந்திரியங்கள் கட்டுக்குள் இருந்தால், பற்றுகள் விலகினால், அனைவருக்கும் இது சாத்தியம்.*

# ஔவைக் குறள்

## ராம் மோஹன்

### *14. நினைப்புறுதல்*

*குறள் 131: சத்தியாம் சந்திரனைச் செங்கதிரோன் ஊடுருவில்*
*முத்திக்கு மூலம் அது.*

*பொருள்: சந்திர கலையும் சூரிய கலையும் ஒன்றாய் இணையும்போது ஸுஷும்னா என்னும் சுழுமுனை நாடியில், ப்ராணன் கும்பம் அடைகிறது (கட்டுப் படுத்தப் படுகிறது). அந்நிலையில் ஸுஷும்னா நாடியில் இறைவனின் தர்ஸனம் கிடைக்கிறது.*

*விளக்கம்: இடது நாசி சுவாசம் சந்திரகலை என்றும், வலது நாசி சுவாசம் சூரியகலை எனவும் கூறப்படும். சந்திரகலையை 'இடை' என்றும், சூரிய கலையை 'பிங்கலை' என்றும் கூறப்படும்.*

*'கால்' என்பது மூச்சு. மூச்சு நிற்பதே 'காலன்' எனப்படும் இறப்பினைக் குறிக்கிறது. இடை, பிங்கலை வழியாக இயங்கும் ப்ராணனை சுழுமுனையில் ஒடுங்கச் செய்வதன்மூலம் பிறவிச் சக்கரத்தை வெல்லலாம் என்ற யோகமுறையினை ஔவையார் விளக்குகிறார்.*

*விநாயகர் அகவலிலும்,*

*இடை பிங்கலையின் எழுத்து அறிவித்துக்*
*கடையில் சுழுமுனை கபாலமும் காட்டி*

*என்று இதே கருத்தை விளக்குகிறார்.*

*சந்திரகலை — இடது நாசி மூச்சு — குளுமையானது*

*சூரியகலை — வலது நாசி — சூடானது*

*முறையான யோகப் பயிற்சியின் மூலம் சுழுமுனை நாடியை இயங்கச் செய்தால் சுவாசம் இரு நாடிகளிலும் சமமாக ஓடும். பன்னிரண்டு ஆண்டுகள் இங்ஙனம் பயின்று, பிரம்மச்சர்யத்தை கடைப் பிடிப்பவர்க்கு மேதா நாடி இயங்க ஆரம்பிக்கும். அனைத்தையும் பற்றிய ஞானம் உதிக்கும். ஜீவசக்தி ஓஜஸ் சக்தியாகி மாறி தேஜஸ் ஆக வெளிப்படும்.*

*இடநிலை-பிங்கலை, சுழுமுனை, சரஸ்வதி, லட்சுமி, மேதா ஆகிய ஆறுநாடிகளும் புருவ மத்தியில் உள்ள ஆக்ஞா சக்கரத்தில் சந்திக்கின்றன. இங்கு கவனம் வைத்து தியானிக்கும்போது, இறையருளால் முக்தி சித்திக்கிறது.*

*குறள் 132: அயனம்கொள் சந்திரனால் ஆதித்தன் ஒன்றில்*
*நயனமாம் முத்திக்கு வீடு.*

*பொருள்: தட்சிணாயனம் உத்தராயணம் என்று, வான சாஸ்திரத்தில் குறிக்கப்படுகின்ற இரு பிரிவுகள் யோக சாஸ்திரத்தில் சூரியகலை, சந்திரகலை என்று இரு பிரிவுகளாய்க் குறிக்கப்படுகின்றது. இவை சுழுமுனை நாடியில் பிராணாயாமத்தின் மூலம் ஒன்று சேர்ந்தால் முக்தியைக் காட்டும் ஞானக் கண் திறக்கும்.*

*குறள் 133: அஞ்சாலு மாயா தறம்பொருள் இன்பமுந்*
*துஞ்சாதவர் துறக்கு மாறு.*

*பொருள்: அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருட்கள் (புருஷார்த்தங்கள்), மனிதன் தன் வாழ்வில் அனுபவிக்கும் ஐந்து அவஸ்தைகளிலும் ஒழியாமல் உள்ளன. ஆத்ம சாட்சாத்காரம் அடைய விரும்புபவன் இந்த மூன்று குறிக்கோள்களை விட்டுவிட்டு, வீடுபேறு (முக்தி) ஒன்று மட்டுமே நாட வேண்டும்.*

*விளக்கம்: ஐந்து அவஸ்தைகளாவன:*

*1. ஜாக்ரம் — விழிப்பு நிலை — நெற்றி ஸ்தானம்*

*2. ஸ்வப்னம் — கனவுநிலை — கழுத்து ஸ்தானம்*

*3. ஸுஷுப்தி — ஆழ்ந்த உறக்கம் — இருதய ஸ்தானம்*

*4. துரியம் — அனைத்தும் கடந்த நிலை — நாபி ஸ்தானம்*

*5. துரியார்த்தம் — பரம்பொருளுடன் ஒன்றுதல்*

*குறள் 134: ஈசனோடு ஒன்றி இசையாப் பொருளில்லை*
*தேசவிளக்கு ஒளியே யாம்.*

*பொருள்: இறைவனோடு நாம் முற்றும் ஒன்றும்போது நாம் அடைய வேண்டிய பொருள் வேறு ஒன்றும் இல்லை. அந்த 'ஜீவ-ப்ரம்ம ஐக்யநிலை' உலகனைத்துக்கும் ஒளியூட்டுகிறது.*

*குறள் 135:தாம்செய் வினையெல்லாம் தன்மைஅற உணரில்*
*காஞ்சனமே ஆகும் கருத்து.*

*பொருள்: தன்னைத் 'தான்' என்று முழுதும் எதிலும் பற்றின்றி உணர்ந்து கொண்டால், இதுவரை நாம் செய்து வந்த அஹங்காரம் தொடர்பான செயல்கள் அனைத்துமே ஒழிந்துபோய் மனம் தூய பொன் போலாகும்.*

*ஒப்பு நோக்குக:*

*கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்*
*மற்றீண்டு வாரா நெறி. (திருக்குறள், 356)*

*பிறவிச் சுழற்சியினின்று விடுதலை பெறுவதே வீடு. அவ்வீடு அறியும் நெறியை உணர்தலே மெய்யுணர்தல். இந்தப் பிறவியிலேயே தீவிர முயற்சியுடன் ஞான நூல்களைக் கற்று உயர்ந்த ஞானியைக் குருவாய் அடைந்து ஞானம் பெற்றவர், மீண்டும் பிறப்பு எடுக்காத முக்தி நெறியை எய்துவார்கள்.*

*குறள் 136: கூடகமான குறிஎழுத்தைத் தான்அறியில்*
*வீடக மாகும் விரைந்து.*

*பொருள்: இந்தப் பிறப்பு இறப்புகள் தொடர்ந்து வருவது கர்மவினையின் பயனால்தான் என்று அறிந்து, தீவிர பிராயாணாமம், யோகம், ஆன்ம சாதனை முதலியவற்றில் ஈடுபட்டால், மிக விரையில் நம் இதய வீட்டிலேயே ஆத்மஞானம் உதயமாகும்.*

*குறள் 137: வீடக மாக விழைந்துஒல்லை வேண்டுமேல்*
*கூடகத்தில் சோதியோடு ஒன்று.*

*பொருள்: விரைவில் இதயத்தினை இறைவனது இருப்பிடமாக மாற்ற விரும்பினால் இதயத்தில் இருக்கும் ஆத்ம ஜோதியை, அந்த ஜோதி தியானத்தால் பரம்பொருளுடன் கலந்து விடலாம்.*

*குறள் 138: பூரித்து நின்ற சிவனைப் புணரவே*
*பாரித்த தாகுங் கருத்து.*

*பொருள்: எங்கும் வியாபகமாய்ப் பரவியுள்ள சிவபெருமானும் நாம் ஒருங்கிணைந்தால் மனம் 'நான்-எனது' என்னும் அஹங்கார, மமகாரத்தை நீத்து சுத்த சைதன்யம் என்னும் சிறப்பை அடைகிறது.*

*விளக்கம்: இறைவன் சர்வ வியாபகத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது தாயுமானவர்,*

*அங்கிங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்*
*ஆனந்தப் பூர்த்தியாகி*
*அருளொடு நிறைந்ததுஎது தன்னருள் வெளிக்குளே*
*அகிலாண்ட கோடிஎல்லாம்*
*தங்கும்படிக்கு இச்சைவைத்து உயிர்க்கு உயிராய்த்*
*தழைத்ததுஎது*

*(திருவருள் விலாசப் பரசிவ வணக்கம், 1)*

*என்றுகூறி, அதுவே அணுவுக்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்ப் பரந்து நிற்கும் பரம்பொருள் என்று விளக்குகிறார்.*

*அந்தப் பரம்பொருளை, தன்னுடைய இதயத்தில் ஒருநோக்கத்துடன் 'அஹம் பிரம்மாஸ்மி' என்று இடைவிடாது தியானித்தால், நம் மனதும் ஜீவபோதம் என்னும் குறுக்குத்தளையில் இருந்து விடுபட்டு பரந்த சிவத்துடன் ஒன்றுபடும் என்கிறார் ஔவைப் பிராட்டியார்.*

*குறள் 139: இரேசக மாற்றி இடையறாதே நிற்கில்*
*பூரிப்ப துள்ளே சிவம்.*

*பொருள்: ரேசகம் என்னும் வெளிவிடு மூச்சை இடைவிடாது பயின்று, மூச்சற்ற இடைவெளியில் கவனித்து நோக்கினால், அந்த முழுமையான பூரகத்தில் இறைவன் நிறைந்து இருப்பான்.*

*விளக்கம்: யோக வாஸிஸ்டத்தில் ரேசக-கும்பக-பூரகங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, வஸிஷ்டர் கூறுகிறார்:*

*யத் கரோதி யதஸ்நாதி*
*புத்3த்4வாலம் அநுஸ்மரண்*
*கும்ப4காதீ3ன்னர: ஸ்வாந்தாத:*
*தத்ர கர்த்தா ந கிஞ்சன (யோ. வா. 6.25)*

*ஜாக்ரத் நிலையிலும் ஸுஷுப்தி நிலையிலும் ப்ராணனை ஒழுங்குபடுத்த வேண்டும்.*

*இதயத்தில் இருந்து பன்னிரண்டு விறற்கடை தூரத்தில் உள்ள ப்ராண நிலையுடன் தொடர்பு கொள்ளும்போது அது பூரகம் எனப்படும். ப்ராண வாயு மேல்நோக்கிப் பயணிக்காமல் அசையாமல் இருக்கும் நிலை கும்பகம். ப்ராண வாயு இதயத்தில் இருந்து எளிதாக வெளிப்படுவது ரேசகம்.*

*அதாவது, நெற்றி மையத்திற்கு மேலே பன்னிரெண்டு விறற்கடை (துவாதய அங்குலம்) தூரத்தில் இருந்து இதயவதம் எனப்படும்.*

*ப்ராண ஸ்ரோதஸ்*

*அந்த இடத்தில் ரேசகத்திற்குப் பின் மூச்சு நிறுத்தப்படுவது பாஹ்ய கும்பகம். பிராண வாயு மூக்கு நுனியின் வழியாக வெளிச்சென்று பன்னிரெண்டு விரற்கடை தூரத்தை அடையும்போது அது பாஹ்ய ரேசகம் எனப்படும். பிராணனின் அசைவு நமக்கு வெளியே அசைவற்று இருப்பது அந்நிலையில்தான். இதை இடைவிடாமல் பயிலச் சொல்கிறார் ஔவையார்.*

*குறள் 140: சிந்தையில் நின்ற நிலைவிசும்பிற் சாக்கிரமாம்*
*சந்திரனில் தோன்றும் உணர்வு.*

*பொருள்: மனது நிலைபெறும்போது தஹராகாரத்தில், உள்வெளியில் மனவிழிப்பு எனும் ஆத்ம ஜாக்ரதை எழுகிறது. இவ்விழிப்பு மனதின் அதிபதியான சந்திரன் தனது பிடிப்பை விடுகிறது.*

*விளக்கம்: 'சந்த்ரமா மனஸோ ஜாத:'*

*புருஷ ஸூக்தத்தில் சந்திரனில் இருந்து மனம் எழுந்தது என்று தேவர்கள் யோக புருஷனைக் கடைந்து எழும் யாகத்தில் மனம் எழுவது குறிப்பிடப்பட்டது. சூர்யகலை ஞான எழுச்சியையும், சந்திரகலை கர்மம், பக்தி இவற்றின் எழுச்சியையும் குறிக்கிறது. இங்ஙனம் ஆழ்ந்த யோகம் பயிலும் காலை கர்மயோகம் என்னும் நிலையையும் தாண்டி, சந்திரகலையில் ஆத்மஞானம் எழுந்து ஞானாதிபதியான சூரியனின் நிலையுடன், சந்திர நிலையும் ஒன்றுபட்டுச் சாதகன் பூரண ப்ரக்ஞன் ஆகிறான் என ஔவையார் கூறுகிறார்.*

*(இந்தக் கலைஞான அதிகாரத்தின் முதல் குறளும் இதே கருத்தைக் கூறுகிறது அல்லவா!)*

# சுவாமினி ஆத்மானந்தா

## வி. நிரஞ்சன்

*பார்த்தனன் புதுமை உயிர் வலி காந்த*
*பருவதம். . .*
*(பகவான் ரமணர், அருணாசல பதிகம், பாடல் 10)*

*அன்பினில் விளையும் இன்பமே அன்பர்*
*அகத்தினில் ஊறும் ஆரமுதே*
*(பகவான் ரமணர், அருணாசல பதிகம், பாடல் 2)*

*As I have said, I have only one purpose: to make man free, to urge him towards freedom, to help him to break away from all limitations, for that alone will give him eternal happiness, will give him the unconditioned realization of the self. (From J.K.'s Dissolution Speech, dissolving The Order of the Star of the East. 1929-ஆம் ஆண்டு கிழக்கு நட்சத்திர அமைப்பைக் கலைத்த பொழுது ஜேகே ஆற்றிய உரையிலிருந்து)*

முமுக்ஷுக்கள் என்கின்ற சொல் ஆற்றல் மிகுந்தது. தமிழில் சொல்வதானால் பிறவி அல்லது வாழ்வாகிய பெரும் துக்கத்தில் இருந்து நிரந்தர விடுதலை பெற விரும்புபவர்கள் என்று அது பொருள்படும். வீடு பேற்றை விரும்புபவர்கள் என்றும் சொல்லலாம். முமுக்ஷுத்துவம் என்பது பிறவித் தளையில் இருந்து விடுபடுவதற்கான தீவிர இச்சை என்று அறிந்து கொள்ளலாம்.

உடல் உலக விடய போகங்கள் இவை அசத்தியம் அநித்தியம் நிரந்தர ஆனந்தம் அற்றவை என்கின்ற விவேகத்தினால் இவற்றின் மீது அபிமானம் அற்று விரக்தி உறும் ஒருவனே இவற்றில் மனம் செல்லாமல் மனதில் நிம்மதியும் இல்லாமல் தவித்துக்கொண்டு

இதற்கான தீர்வு வேண்டி அலைந்துகொண்டிருக்கிறான். அவ் வேளையிலே சாந்தம் அன்பு கருணை வடிவாய் விளங்கும் சற்குரு ஒருவரை புண்ணிய வினைப்பயனால் அவன் அடைகின்றான். தான் தேடும் சாந்திக்கு அவரே வழிகாட்டி என்று உறுதி அடைந்து அவரைப் புகல் எனத் தஞ்சம் அடைகின்றான்.

இப்படிப்பட்ட அதீதீவிர விவேகமும் வைராக்கியமும் கொண்டவனே பக்குவ பக்தன் என்பதை உறுதி செய்யும் ஞான குரு அவனுக்கு ஆன்மவிசாரத்தை உபதேசிக்கிறார். பொய்யை விலக்கி மெய்யைக் காட்டுகின்றார்; அறியாமையை நீக்கி அறிவைக் காட்டுகின்றார்; துக்கத்தை ஒழித்து சுகத்தைக் காட்டுகின்றார். பொய்யும் அறியாமையும் துக்கமும் மனோமயமே என்பதை உறுதி செய்கின்றார். எண்ணங்களும் எண்ணவித்துக்களும் வாசனைகளும் முற்றும் அடங்கிய சூனியமனமே சுத்த சத்துவ மனம் என்று விளக்குகின்றார். அதுவே பூரண இருப்பும் பூரண அறிவும் பூரண ஆனந்தமும் ஆகும் என்றும், அதுவே ஜீவ சொருபம் என்றும், அதுவே ஈசுவர சொருபம் என்றும், அதுவே ஜகசொருபம் என்றும், அதுவே இவை அனைத்திற்கும் அப்பால், அவையும் கடந்த, பரம் என்றும் சொல்லாமல் சொல்லி அருளுகின்றார்.

ஆன்மா என்கின்ற பதம், தான் என்னும் பொருள்படும். அதில் இருந்து விரிவான சொல்லே ஆன்மீகம் என்பது. தன் உண்மை அறிதல் என்பதே ஆன்மீகம் ஆகும். தன் உண்மை அறிதல் என்பது அனைத்து ஜீவரிடத்திலும் நிகழவேண்டிய ஒரு முக்கிய நிகழ்ச்சி. “தன்னை அறிதல் இன்றிப் பின்னை எது அறிகில் என்? தன்னை அறிந்திடில் பின் என்னை உளது அறிய?” என்னும் கேள்வி மகரிஷி ரமணரின் மகாவாக்கு. தன் மெய் அறியாதவன் தன்னைக் கொன்றவன் ஆவான் என்று விவேக சூடாமணியில் ஆதிசங்கரர் கடுமையாகக் கூறியிருக்கின்றார். பகவான்

ரமணரும் தன் மெய் அறியாமையை ஆத்மஹத்தி தோஷம் என்று நம் கவனத்திற்குக் கொணருகின்றார்.

ஆனாலும் உலகத்தவர் உடலையும் உலக போகங்களையும் மெய் எனக் கொண்டு வாழ்க்கையின் நோக்கமே இவ்வின்பங்களைத் துய்த்தல் என்பதாக மயங்கி அவற்றில் சிக்கி உழன்று திகட்டாமல் ஜனித்தும் மரித்தும் ஓயாமல் பவ சாகரத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். ஒரு சிலர் மட்டுமே இவ்வாழ்க்கையைக் கணத்தில் காலன் துடைத்திடுவான் என்பதை நன்கு அறிந்து, மரணத்தின் முன்னால் அனைத்துச் சாகசங்களும் மின்னல் கீற்று ஒத்தவையே என்று உணர்ந்து, தம் உண்மை அழிபடும் பொருளா இல்லை அழிபடாத நித்தியப் பொருளா என்பதை அறிவதே தமது வாழ்வின் முக்கிய நோக்கமாகக் கொள்கின்றனர். இதற்கான தெளிவைத் தேட ஆரம்பிகின்றனர்.

அச் சமயத்தில்தான், வாழ்க்கையின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு விட்டது ஒப்ப பெரும் சாந்தம் நிலவும் வதனத்தோடும் கனிவோடும் தோன்றுகின்ற ஞானகுரு ஒருவரைக் காணும் பாக்கியம் அவர்களுக்குக் கிட்டுகின்றது. குருவின் மோன சன்னிதியை இவ்வாறாகச் சரணடைகின்றார்கள். பக்குவியாகிய அவர்களது தீவிர தாகத்தை குருவானவர் உபதேசம் மூலமாகக் கருணை மழை பொழிந்து தணிக்கின்றார்.

1904. ஆஸ்திரியாவில் யூத குடும்பத்தில் பிறந்தவர் ப்லாங்க்கா ஷ்லாம் (Blanca Schlamm). அவரது தந்தை செல்வந்தர். ப்லாங்க்காவின் தங்கையின் பிறப்பை ஒட்டி அவரது தாய் காலமானார். இரு குழந்தைகளையும் வளர்க்க ப்லாங்க்காவின் தாயின் தாய் அவர்களோடு இணைகின்றார். ப்லாங்க்காவின் தந்தை செல்வத்தால் அவர்கள் அடையக் கூடிய அனைத்தையும் அவர்களுக்குப் பெற்றுத் தருகின்றார். ப்லாங்க்காவின்

தங்கை இரக்கமிக்கவளாய் இருந்தாள். சின்ன வயதிலேயே அவர்களைச் சுற்றி இருந்த நலிவடைந்த பகுதிகளில் இருக்கும் சிறுவர் சிறுமியருக்குப் பல் வகையில் உதவி செய்து வந்தாள். அவர்களோடு நெருங்கிப் பழகிக் கொண்டிருந்த அவள் தொண்டை அடைப்பு நோய்த் தொற்றினால் மரணம் அடைந்தாள். தனது தங்கை ஏழைச் சிறுவர்களுக்காகத் தன்னையே தியாகம் செய்து கொண்டது ப்லாங்க்காவின் மனதில் ஆழப்பதிந்தது. தங்கை தனது அக்காவிற்கு முதல் குருவாக இருந்தனள் போலும்.

சிறு வயதிலேயே ப்லாங்க்கா முதல் உலகப் போரின் கொடுமையை உணர்ந்தார். பின்னர் பொருளாதார வீழ்ச்சியில் அவரது தந்தை செல்வத்தை எல்லாம் இழக்கின்றார். ப்லாங்காவின் மனதில் வாழ்க்கையைப் பற்றிய கேள்விகள் எழ ஆரம்பித்தன. வன்முறை, பகை, பொருளாதாரச் சரிவு, ஏழ்மை, மரணம், துக்கம், சமூகச் சீர்கேடு, யூத இனத்தவர் மீது வெறுப்பு பகை, இவ்வாறாக பல துயரங்கள் அவரது மனதைப் பாதித்துவந்தன. இவற்றுக்கான தீர்வு அவருக்குத் தெளிவாகக் கிடைக்கவில்லை. இவற்றை எல்லாம் மனதின் அடியில் எங்கோ புதைத்துவிட்டு மேல் எழுந்தவாரியாக விஷயபோகங்களில் மயங்கிவிடுவதை அவர் விரும்பவில்லை. தன்னைப் பற்றியும் வாழ்வைப் பற்றியும் உலகைப் பற்றியும் உண்மை என்ன என்பதை அறிந்து கொள்வதால் மட்டுமே தன் மனம் சாந்தமுறும் என்று உணர்ந்தார்

அவரது சமயத்தின் விதிகளும் கட்டுப்பாடுகளும் கோட்படுகளும் நேரடியாக அவரது தேடலுக்கு உதவவில்லை என்று அவருக்குத் தோன்றுகின்றது. இதன் விளைவாக அவர் பிரம்ம ஞான சபையில் சேர்ந்தார். அவரது கேள்விகள் குறித்து அச் சபை தனக்குத் தெளிவினைத் தரமுடியும் என்று நம்புகிறார். 1925-இல் பிரம்ம ஞான சபையினரின் உலக மாநாடு

சென்னையில் நடந்தது. அந்த மா நாட்டிற்கு வந்தார். அச் சமயம் ஜே.கிருஷ்ணமூர்த்தி அச் சபையின் உலக குருவாக வந்து அவர்களை வழி நடத்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஜே.கே. அவர்களின் *At The Feet of The Master* என்னும் சிறு கையேடு ஒன்று அவருக்குக் கிடைத்தது. அதைப் படித்துவிட்டு ஜே.கே. தனது குருவாக இருந்து தனக்கு வழிகாட்டுவார் என நம்பினார்.

1929-ஆம் ஆண்டு ஹாலந்தில் நிகழ்ந்த கூட்டத்தில் பிரம்ம ஞான சபையிடமிருந்து மாறுபட்ட தனது நிலைப்பாட்டை ஜேகே வெளிப்படுத்துகிறார். உண்மை என்பது அதை அடைவதற்கான பாதை ஒன்றும் இல்லாத நிலம். உண்மைக்கு யாரும் பாதை அமைக்கமுடியாது. எந்த குருவும் எந்த நூலும் ஒரு பாதையைக் காட்டமுடியாது. ஒவ்வொருவரும் தாங்களே தங்களது மனதின் தளைகளை முற்றிலும் களைந்து விளையும் உட்கவனத்தால் அதை உணர முடியுமே தவிர புற உலகிலோ பாவனைகள் நிறைந்த மன உலகிலோ உண்மை காணப்படாது என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டார். *Order of the Star of the East* என்னும் அமைப்பினைக் கலைத்து அதன் தலைமையையும் துறக்கின்றார்.

இது ப்லாங்க்காவை பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியது. அவர் ஜே.கே.யின் விளக்கங்கள் வலிமையானவையாய் இருப்பதை உணர்ந்தார். ஜேகேயின் ஆளுமையினால் பெரிதும் கவரப்பட்ட ப்லாங்க்கா ஜேகே-யை விட்டுப் பிரிய முடியாமலும் மாற்று வழி ஒன்று காணமுடியாமலும் குழப்பமுற்று இருந்தார். அச் சமயம் அவர் காசியில் ராஜ்காட்டில் உள்ள ஜேகேயின் பள்ளி ஒன்றில் ஆசிரியை வேலை எடுத்துக்கொண்டு இந்தியாவிற்கு வருகின்றார்.

1935-ஆம் ஆண்டு இது நிகழ்கின்றது. அதன் பிறகு வாழ்வின் இறுதிவரை இந்தியாவிலேயே

தங்கிவிட்டார். இரண்டாம் உலகப் போர் ஐரோப்பாவைச் சீரழித்ததோடு மட்டும் அல்லாமல் மில்லியன்களில் யூத இனப் படுகொலைக்கான களமாய் இருந்தது. இதன் விளைவாக ப்லாங்க்கா தனது தந்தையையும் பாட்டியையும் இழக்கின்றார். இத்தகைய சூழலில் ப்லாங்க்கா ஜேகே பள்ளியில் ஆசிரியைக்கான வருவாய் குறைந்ததாக இருந்தும் எளிமையாய் வாழ்ந்து வருகின்றார். நிறைய ஊதியம் பெற்று வசதியான வாழ்வு வாழவேண்டும் என்பது அவரது விருப்பமாய் இல்லை. வாழ்வின் துயரங்கள் குறித்த புரிதலே அவரது ஒரே குறிக்கோளாய் இருந்தது. இந்தியாவில் ஜேகேயின் பள்ளியில் பணி புரிவதுடன், ஜேகேயுடனான தொடர்பும் தனக்கு வழிகாட்டும் என்பதில் உறுதியாய் இருந்தர். ஆயினும் ஜேகேயின் அருகாமையோ அவரது விளக்கங்களோ அவரிடம் எவ்வித ரஸவாத மாற்றத்தையும் உண்டு பண்ணவில்லை. மாறாக ஜேகே பழமையையும், மறை நூல்களையும், குருமார்களையும் கேள்விக்குறி ஆக்கிவிட்டது என்னவோ ப்லாங்க்காவால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

ஜேகே ராஜ்காட் பள்ளிக்கு ஆண்டுதோறும் வரும்பொழுது எல்லாம் குருத்துவத்தையும் பாரம்பரியத்தையும் அவர் சாடிவருவதை ஏற்க முடியாமல் அவரிடம் கடுமையாக விவாதித்துவந்தார். இருந்தும் ஜேகேயின் தாக்கத்தில் இருந்து அவர் எளிதில் விடுபட முடியாமல் ஒரு பெருந்தடுப்புச் சுவர் ஒன்றினால் தடைபட்டுக் கிடந்தார். மெய்ப்பொருளைத் தேடி அடையவேண்டிய தீவிரத்தில் இருக்கும் பொழுது, குரு விலக்கப்படுகின்றார், பாதையும் விலக்கப்படுகின்றது, புத்தியும் மனமும் விலக்கப்படுகின்றன என்றால் என்னதான் செய்வது?

ஜேகேயின் சொற்பொழிவுகளைக் கேட்கின்ற மாத்திரத்தில் எதுவும் நடப்பதாக ப்லாங்க்காவிற்குத் தெரியவில்லை. ப்லாங்க்கா ஜேகேயை விடவும்

இல்லை. ஆனால் ஜேகே அப்படி ஒரு குரு சீட இணைப்பை வரவேற்கவும் இல்லை. இந்த சிக்கலும் குழப்பங்களும் மிகுந்த சமயத்தில்தான் ப்லாங்க்கா 1942-இல் பகவான் ரமணரைத் தரிசிக்க வருகின்றார். அது அவரது வாழ்விலும் மனதிலும் அவர் அடைய வேண்டிய மாற்றத்தை இதமாக உண்டாக்குகின்றது

மே மாதம் 10-ஆம் தேதி ராஜ்காட்டிலிருந்து புறப்படுகின்றார். அப்போது அவரது மனதில் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. தன்னுடைய மனப்போராட்டம் முடிந்து விட்டது, இனிமேல் அமைதி கிட்டும் என்று அவரது உள்ளுணர்வு கூறியது. முதலில் பகவானது சன்னிதியில் அவர் மனம் சாந்தமுற்றது. ஆனாலும் அவருடைய குறைகாணும் மனது பகவானின் பக்தர்கள் பல விதங்களில் பகவானை வணங்கி வழிபடுவதை எல்லாம் பார்க்கும் பொழுது அதிருப்தி அடைந்தது. அவர்களை விடத் தனது மனப்பக்குவம் உயர்ந்தது என்று மதிப்பிடத் தோன்றியது.

விரைவிலேயே அவர் இது தனது அகந்தையின் பாவனை முடிச்சு என்று அறிந்துகொள்கின்றார். இப்படிப்பட்ட முடிச்சுக்கள் ஆணவமலத்தின் வெளிப்பாடே என்பதை அறிந்துகொள்கின்றார். பணிவும் அடக்கமுமே ஆன்மத் தேடலில் இன்றியமையாதவை என்றும் அறிந்துகொள்கின்றார். பகவானுடைய சன்னிதியில் அவர் பக்குவப்பட்டு வருகின்றார்.

புல மனங்களுக்கு அப்பாற்பட்டு விளங்கும் பரம்பொருளை உணர்வதற்கு, தானும் தனது மனமும் முற்றிலும் அடங்கவேண்டும் என்பதையும் அறிகின்றார். சிறிதுசிறிதாக பகவானது சன்னிதியாலும் அவரது வழிகட்டுதலாலும் அவர் பயன் பெறுகின்றார். ஜேகேயிடம் அவர் கண்ட முரண்பாடுகள் பகவானது வழிகாட்டுதலால் சமரசப்பட்டுப் போயின. பகவானது

*ஆன்மவிசார மார்க்கத்தில் மூல முடிச்சாகிய அகந்தையே அடியோடு வேர் அறுக்கப்படுவதையும் அவர் உணர்கின்றார். ஆத்மவிசாரத்தின் வழியாக அனாத்ம விசாரம் அழிந்துபடுவதையும் சொருப மெய்ஞானம் உணர்வாவதையும் புரிந்து கொள்கின்றார். ஆனால் சிரவணம் மனனம் நிதித்தியாசனம் என்பது பக்குவ முதிர்ச்சிக்கான ஆயத்தமே தவிர அவையே இறுதி இலக்கிற்குக் கொண்டு போகா என்பதையும் தெரிந்துகொள்கின்றார்.*

*வெட்ட வெளியில் ஒளிரும் நிலவை குருவானவர் உனக்குக் காட்டுவார். நீ தான் உனது கண்களைக் கொண்டு அந்த நிலவின் இருப்பினை மெய்ப்படுத்திக் கொள்ளவேண்டும். உனக்காகக் குருவானவர் அந்த நிலவைப் பார்ப்பதில் எந்தப் பயனும் இல்லை என்னும் பொருள்படக் கூறுவார் பகவான். அகந்தை முற்றிலும் ஒழிந்த சற்சீடன் சூனிய சத்துவமனதில் மெய்ப்பொருளாம் தன் உண்மையைத் தானே உணர்ந்து கொள்ளவேண்டும். அது மட்டும் அல்லாமல் ஒருமுறை உணர்வாகிய மெய் ஞானம் எண்ண எழுச்சியால் மறைந்துவிடாது நித்தியமாய் விளங்க விஷய வாசனைகள் வேர் அறுக்கப்பட்ட நிலையில் அடையும் நிர்விகல்ப சமாதியும் பின்னர் சஹஜசமாதியுமே முதலும் முடிவுமான நிலை என்பதே பகவானின் உபதேசம். சாதகனின் விவேகமும் விரக்தியும் தபசும் எவ்வளவு உயர்ந்தவை, இன்றியமையாதவை!*

*பகவானுடைய சன்னிதியிலும், மானசீகமாகவும், நேர்முகமாகவும் பகவானோடு உரையாடிய வண்ணம் ப்லாங்கா பக்குவம் அடைகின்றார். பகவானை விட்டுப் பிரிகின்ற தருணம் மீண்டும் பகவானிடமே வந்துவிடுவேன் என்ற உறுதியோடு ரயிலில் பயணம் ஆகிறார். சற்று நேரத்திலேயே அவரது உள்ளுணர்வு "நீ பகவானிடம் திரும்பி வர இயலாது போகும்" என்று கூறுகின்றது.*

# எச்சரிக்கை! எச்சரிக்கை!!

**ராம்மோஹறன்**

ஞானி ஒருவரிடம் நான்கு சீடர்கள் இருந்தனர். அவர்களுக்குச் சிறந்த ஞான நெறியினை அவர் போதித்து வந்தார். தனது ஞான திருஷ்டியினால் தமது வாழ்நாள் விரைவில் முடியப் போகிறது என்று உணர்ந்த அவர்,

*தர்ஶனாத் அப்ரஸத3சி*
*ஜனனாத் கமலாலயே*
*காஶ்யாந்து மரணான் முக்தி:*
*ஸ்மரணாத் அருணாசலே: ॥*

என்ற வாக்கின்படி அருகில் காசி இருப்பதால் அங்குச் சென்று தேஹ வியோகம் செய்து விடலாம்; உடனே முக்தியும் கிடைக்கும் என்று முடிவு செய்து சிஷ்யர்களிடம் என்னைப் பல்லக்கில் வாராணஸி நகரத்துக்கு எடுத்துச் செல்லுங்கள் என்று கட்டளையிட்டார். ஓரிரு நாட்களில் காசி நகரை அடைந்து விடலாம் என்று எண்ணிய சீடர்கள் பல்லக்கில் குருவைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார்கள்.

காசியை நெருங்க வழி தவறியதால் சிறு பிரச்சினை ஏற்பட்டு கால தாமதம் ஆனது. காசி வந்து விட்டதா? என்று கேட்ட குருவிற்கு, இன்னும் சில மணி நேரங்கள் ஆகலாம் என்று சீடர்கள் விடையிறுத்தார்கள். காசி வர சிறிதுநேரம் ஆகும். இப்போது காசி நகரில் பறை அடித்து அறிவிப்பு செய்யும் முரசு முழங்குவோர் சேரியில் நாம் இருக்கிறோம் என்று பதில் வந்தது. இதனைக் காதில் கேட்டுக் கொண்டிருந்தபோதே குருவின் உயிர் பிரிந்தது.

*யம் யம் வாபி ஸ்மரந்பா4வம் த்யஜத்யந்தே கலேவரம் ।*
*தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்3பா4வபா4வித: ॥*
*கீதை 8-6*

*“மரணத் தறுவாயில் ஒருவனுடைய சிந்தனை எந்த எண்ணத்தில் உள்ளதோ அதுவே அவனது மறுபிறவியை நிர்ணயிக்கிறது” என்பது கண்ணன் கூறும் தத்துவம்.*

*ஆகையினால் மரணம் அடையும்போது பறை ஒலி செய்யும் முரசுச் சேரி என்ற சொல் அவர் காதில் விழுந்து, மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியதால், அவர் முரசு அறைவோர் சேரியில், அவ்வூர் அரசனிடம் முரசு அறைவோனாகப் பணிபுரிபவனுக்கு மகனாக மறுபிறவி பெற்றார்.*

*அந்த முரசு அறைவோனின் வேலை யாதெனில் ஒவ்வொரு நாளும் இரவு முழுவதும் நகரத்தைச் சுற்றி வந்து ஒவ்வொரு ஜாமத்திலும் முரசு அறைந்து “திருடர்கள் கொள்ளை அடிக்க வருகிறார்கள்! ஜாக்கிரதை, ஜாக்கிரதை!” என்று மக்களை எச்சரிப்பதே.*

*இந்த முரசு அறைவோனுக்கு மகனாகப் பிறந்ததாலும், தமது பூர்வ ஜன்ம ஸம்ஸ்காரத்தின் காரணமாக, உலகப்பற்றை முற்றிலும் நீக்கி, மக்களுடன் தொடர்பை நீக்கி, எப்போதும் தனிமையிலேயே இருந்தார். யாருடனும் ஒருவார்த்தை கூடப் பேச மாட்டார். பெரும்பாலோர் இவரை ஊமை என்றே எண்ணிக்கொண்டு இருந்தனர். இந்த இளைஞனும் தனது உள்ளுணர்வு காட்டியபடியே வாழ்ந்து வந்தான்.*

*ஒருசமயம், மூத்த முரசறைவோன் வேலை நிமித்தமாக வெளியூர் செல்ல வேண்டி வந்ததால் அரசனிடம், “எனக்குப் பதிலாக எனது உதவாக்கரை மகன் இன்று நகரை வலம் வந்து நான்கு ஜாமங்களிலும் எச்சரிக்கை முரசறைவான்” என்று வேண்டிக் கொண்டார். அரசனும் அனுமதித்தார்.*

ஆயினும் அரசனுக்கு ஓர் ஐயம் ஏற்பட்டது. இந்த அசட்டு ஊமை எங்ஙனம் முரசு அறைந்து எச்சரிக்கை அறிவிப்பு தருவான்? நாமே பார்த்து விடலாம் என்று மாறுவேடம் அணிந்து முரசறையும் இளைஞன் பின்னாலேயே சென்றான்.

முதல் ஜாமப் பொழுது துவங்கியது. முரசு அடித்துக் கொண்டு வீதிவலம் வந்த இளைஞனுக்கு எச்சரிக்கை முழங்கும் நேரம் வந்தது. அரசன், ‘இந்த முட்டாள் எங்ஙனம் எச்சரிக்கை செய்யப் போகிறான்?’ என்று மறைவாக நின்று பார்த்தான்.

இளைஞன் முரசினை அறைந்து எச்சரிக்கையைக் கூவினான்.

காம குரோத4ச்ச லோப4ச்ச தே3ஹே நிஷ்டந்தி தஸ்கரா
ஞான ரத்னாப ஹாராய தஸ்மாத் ஜாக்3ரத ஜாக்3ரத

காமமும் குரோதமும் லோபமும் உடலில் மறைந்து செயல்புரியும் பெருந் திருடர்கள். நீ சற்று ஏமாந்தால் ஆத்மஞானம் எனும் பெரும் ரத்தினத்தைப் பறித்துக் கொண்டு போய் விடுவார்கள். எனவே எச்சரிக்கையாக இருங்கள். ஜாக்கிரதையாக இருங்கள் என்று முரசு அறைந்தான்.

மறைவிலிருந்து இதனைக் கேட்ட அரசன் பெரும் வியப்பு அடைந்தான். இவர் வெளியில் தோன்றுவது போல் முட்டாள் ஊமை அல்ல. இவர் பெரும் ஞானி என்று உணர்ந்தான்.

இரண்டாம் ஜாமம் வந்தது. முரசு அடிக்கும் இளைஞனாகிய ஞானி முரசு அடித்துவிட்டு உரத்த குரலில் தன் எச்சரிக்கையை முழங்கினான்.

ஜன்ம து3க்க2ம், ஜரா து3க்க2ம், ஜாயா து3க்க2ம் புன: புன: ।
ஸம்ஸார து3க்க2ம் சாக3ர து3க்க2ம் தஸ்மாத் ஜாக்3ரத ஜாக்3ரத ॥

பிறப்பும் துன்பம், மூப்பும் துக்கம், இவ்வாழ்க்கையும் துயரம், மறுபடி பிறந்தாலும் துன்பம். எனவே

எச்சரிக்கையுடன் இருங்கள் ஜாக்ரதை என்று முழங்கினான். இதனையும் அரசன் கூர்ந்து கேட்டான்.

மூன்றாம் ஜாமத்தில் இளைஞன் முரசு அறைந்து எச்சரிக்கை ஒலியை எழுப்பினான்.

*மாதா நாஸ்தி பிதா நாஸ்தி நாஸ்தி பந்து: ஸஹோதர: ।*
*அர்த்தம் நாஸ்தி க்3ருஹம் நாஸ்தி தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥*

தாயும் இல்லை, தந்தையும் இல்லை. சுற்றமும், உடன் பிறந்தோர் என்று எவரும் இல்லை. இதை அறிந்து எச்சரிக்கையாக இருங்கள். ஜாக்கிரதை.

அரசனும் இதைச் செவிமடுத்தான்.

நான்காம் ஜாமமும் மலர்ந்தது. தெருவில் முரசறைந்து சென்ற இளைஞன் எச்சரிக்கை ஒலியை எழுப்பினான்.

*ஆமாயா ப3த்4யதே ஜந்து: கர்மணா ப3ஹுசிந்தயா ।*
*ஆயு க்ஷீணம் ந ஜாநாதி, தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥*

இந்த உலகம் முழுவதும் ஆசையால் கட்டுண்டு உள்ளது. முன் கர்மங்களின் செயல்பாட்டாலும் பல்வேறு கவலைகளாலும் நமது ஆயுள் தேய்ந்து கொண்டே போவதை அறியமாட்டீர்களா? எனவே எச்சரிக்கை! ஜாக்கிரதையாக இருங்கள்.

இங்ஙனம் நான்கு ஜாமங்களிலும் இளைஞர் முழங்கிய வேதாந்த உபதேசம் மன்னர் மனதை மிகவும் கவர்ந்தது. இந்த இளைஞனைத் தன்னுடனேயே அரண்மனை வேலையில் வைத்துக் கொண்டால் தமக்கு ஆன்மிக வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும் என்று கருதிய அரசன் மறுநாள் தன்னைக் காணவந்த இளைஞனின் தந்தையிடம், "உம் மகன் ஒரு ஊமையோ, அசடோ அல்ல. அவன் ஒரு பெரும் ஞானி. அவனை நம் அரண்மனையில் ஏதேனும் வேலையில் அமர்த்த விரும்புகிறேன். நாளை அவனை அழைத்து வாரும்" என்றான்.

அங்ஙனமே மறுநாள் வந்த இளைஞனிடம், “ஞானியே! எமது அரசாங்கத்தில் எந்த வேலை வேண்டுமோ அதைச் சொல்லுங்கள். அதில் உங்களை அமர்த்தி விடுகிறேன். நீங்கள் அரண்மனையில் வசித்து எமக்கு வழிகாட்ட வேண்டும்” என்றான். அதற்கு இளைஞன், “கொடிய குற்றம் செய்தவர்கட்கு சிரச்சேதம் செய்யும்படி மரணதண்டனை விதிக்கின்றீர்கள் அல்லவா? அவர்கள் தலைகளை நானே எனது கையால் வெட்ட வேண்டும். இதுவே நான் வேண்டும் வேலை” என்றான்.

ஏன் இந்த விநோதமான வேண்டுகோளைக் கூறுகிறான் என்று அரசனுக்குப் புரியவில்லை. எனினும் தான் ஒத்துக்கொண்டபடி கொலைக் களத்தின் அருகே ஓர் இல்லம் அமைத்து இளைஞனுக்கு இடவசதி அமைத்தனர். அதற்கு அருகாமையிலேயே கொடும் குற்றம்செய்து கொலைத் தண்டனைக்காகக் காத்திருக்கும் குற்றவாளிகளின் சிறைச்சாலை இருந்தது. அந்த இளம் ஞானியும் குற்றவாளிகளின் தலைவெட்டும் தொழிலைச் செய்து வந்தான்.

சில மாதங்கள் கழிந்தன. இப்போது கதை நடைபெறும் நிலைக்களன் தேவலோகம். பிரம்மாவின் முன் கவலை தோய்ந்த முகத்துடன் யமதர்மன் நின்று கொண்டு இருந்தான். “ஏன் இப்படிக் கவலையுடன் உள்ளீர்?” என்று பிரம்மதேவன் கேட்டதற்கு, யமதர்ம ராஜன் விடை பகர்ந்தான்: “பூலோகத்தில் கடும் குற்றங்கள் செய்தவர்களை நரகத்திற்கு அனுப்பி கடும் துன்பங்கட்கு ஆளாக்குவேன். பல ஆண்டுகளாக இந்த வேலையைச் செய்துகொண்டு இருக்கிறேன். ஆனால் கடந்த சில மாதங்களாக யாருமே நரகத்திற்கு வருவதே இல்லை. எனக்கு வேலையே இல்லை. நரகத்தில் வேலை செய்யும் எனது பணியாளர்களுக்கும் வேலையே இல்லை. இத்தனைநாள் கடும் பாவம்

செய்தவர்கள் அனைவரும் எங்கேதான் போனார்கள்?" என்று வருந்தினான்.

இதைக் கேட்ட பிரம்மதேவரும் வியப்பு அடைந்தார். "அப்படியா! நாம் காசித் தலத்திற்குப் போய்ப் பார்ப்போம். இந்தக் குற்றவாளிகள் எங்குதான் செல்கிறார்கள் என்று அறியலாம்" என்று புறப்பட்டார். பூலோகத்தில் கொலைக் குற்றவாளிகள் மரண தண்டனை அளிக்கப்படும் நிகழ்வையும் கண்டனர். ஆனால் அங்கு வேறுபட்ட நிலையில் தண்டனை நிகழ்த்தப்பட்டது. கொலைக் களத்தின் மத்தியில் ஒரு பெரிய சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டு இருந்தது. அது ஒரு சந்நிதியாய் அமைக்கப்பட்டு தூபம், தீபம் மலர்கள் அனைத்தும் பூஜைக்காக வைக்கப்பட்டு இருந்தன. அந்த லிங்கத்திற்கு எதிரே சாஸ்திர, இதிஹாச நூல்கள் வைக்கப்பட்டு இருந்தன. கொலைக் குற்றத்திற்காக மரண தண்டனை அளிக்கப்பட்ட குற்றவாளிகள் சிவலிங்கத்திற்குமுன் நிறுத்தப்பட்டனர். அவர்களுக்கு சமய, வேதாந்த உண்மைகளையும், பகவத் ஸ்தோத்திரங்களையும் எடுத்துக்கூறி விளக்கினான். அவனது விளங்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்த குற்றவாளிகளின் மனம் தெய்வ சிந்தனையிலிலேயே லயித்திருந்தது. அப்போது இளைஞன் அவர்கள் பின்புறம் நின்று வாளால் அவர்கள் தலைகளை வெட்டினான். தெய்வ சிந்தனையே அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருந்த தருணத்தில் கொலையுண்டதால் அவர்கள் அனைவருமே நரகம் செல்லாமல் ஸ்வர்க பதவி அடைந்தனர். அதைக் கண்ட பிரம்மதேவர், நரக லோகத்திற்கு கடும் குற்றவாளிகள் செல்லாமல், ஸ்வர்க்கம் அடைந்த காரணத்தை அறிந்தனர்.

"இங்ஙனம் தீயவரைப் பாவத்திலிருந்து விடுவிக்கும் எண்ணம் எங்ஙனம் உனக்கு வந்தது?" என்ற



*பிரம்மதேவனின் கேள்விக்கு இளைஞன் கூறினான், "நான் போன பிறவியில், இறை உணர்வில் மூழ்கிய துறவியாய் இருந்தபோதும், இறக்கும் தருவாயில் பறை அடிப்போர் சேரியைப் பற்றிய எண்ணம் வந்ததால், இப்பிறவியில் நானும் முரசறைவோனாய்ப் பிறந்தேன். எனவே இங்கு கொணரப்பட்டு, மரண தண்டனைக்கு உட்பட்ட குற்றவாளிகளையும் உயிர்போகும் தறுவாயில் இறை உணர்வில் மூழ்கச் செய்து, ஸ்வர்க்கம் அடையச் செய்கிறேன்" என்றான்.*

*இந்த அற்புதமான கதை இறை உணர்வில் எப்போதும் ஆழ்ந்திருப்பதன் சிறப்பை உணர்த்துகிறது.*

*இந்தக் கட்டுரை ஸ்வாமி கமலாத்மாநந்தர் எடுத்துரைத்த அருள் கதைகள் அடியொற்றி வரையப்*

பெற்றது. இதே கருத்தை உள்ளடக்கி சங்கர பகவத் பாதர் எழுதியதாகக் கூறப்படும் வைராக்ய ஸ்தோத்ரங்கள் என்னும் தொகுப்பிலும் காணப்படுகிறது. இதில் முதல் நான்கு ஸ்லோகங்கள் இப்பொழுது நாம் காண்ட நான்கு ஸ்லோகங்களுடன் ஒத்துள்ளன. இதற்கு மேலாக இன்னும் மூன்று ஸ்லோகங்கள் காணப்படுகின்றன அவையாவன:

*ஸம்பத3: ஸ்வப்ன ஸங்காஶா: யௌவனம் குஸுமோபம்।*
*விது4ச்சன் சஞ்சல ஆயுஷம் தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥*

நாம் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்கள் எல்லாம் கனவில் காணும் பொருள் போன்றவை. ஒரு மலரின் மிகக் குறைந்த வாழ்நாள் போன்று இளமையும் மிகச் சிறிய காலமே நீடிக்கும். நம் முழு வாழ்நாளும் மின்னல் போன்று க்ஷணத்தில் மறையக் கூடியது. எனவே எச்சரிக்கையுடன் இரு. ஜாக்கிரதை.

*க்ஷணம் வித்தம் க்ஷணம் சித்தம் க்ஷணம் ஜீவிதமாவயோ।*
*யமஸ்ய கருணா நாஸ்தி தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத ॥*

மனம், சித்தம், வாழ்நாள் அனைத்துமே விரைவில் மறையக் கூடியவை. மரண தேவதையாம் யமனுக்குக் கருணையே கிடையாது. எனவே எச்சரிக்கை உடன் இருப்பாயாக. ஜாக்கிரதை!

*யாவத் காலம் ப4வேத் கர்ம: தாவத் திஷ்டந்தி ஜந்தவ: ।*
*தஸ்மின் க்ஷீணே விஶ்யந்தி தத்ர கா பரிவேத3னா ॥*

தமது கர்மப் பொதி நீடிக்கும்வரை, இவ்வுலகில் (மனிதன் உட்பட) ஜீவராசிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. கர்ம வினைத் தொகுதி முடிந்தவுடன், ஜீவராசிகள் மறைகின்றன. இத்தகைய நிலையற்ற ஒன்றைக் குறித்து சிந்திக்க என்ன உள்ளது?

*ருணாநு ப3ந்த4 ரூபேண பஶு பத்னி ஸுதாலய:।*
*ருணக்ஷயே க்ஷயந்தி தத்ர கா பரிவேத3னா ॥*

நமது பிராரப்த கர்மத்தின் செயல்பாட்டின்படி நமது உலகத் தொடர்புகள் வளர்கின்றன. செல்வங்கள்,

*மனைவி-மக்கள் அனைத்துமே முற்பிறவிகளின் கடனே. இந்தக் கடன் (சாதனையால்) தீர்ந்த பின்னர் கவலைப்பட்டு இன்னும் சிந்திக்க வேறு என்ன உள்ளது?*

*பக்வானி தரு பர்ணானி பதந்தி க்ரமஸோ யதா: ।*
*ஜந்தவ: காலே தத்ர கா பரிவேத3னா ॥*

*உலர்ந்த, பழுத்த இலைகள் மரத்திலிருந்து ஒவ்வொன்றாக உதிர்கின்றன. இது இயற்கை நியதி. இதைக் குறித்து ஏன் வருந்த வேண்டும்?*

*ஏக வ்ருக்ஷ ஸமா ரூட நாநாஜாதி விஹங்கமா:।*
*ப்ரபாதே க்ரமஸொ யாந்தி தத்ர கா பரிவேத3னா ॥*

*ஏதோ ஒரு மரத்தின் கிளைகளில் பல்வேறு வகைப் பறவைகள் அமர்ந்துள்ளன. சூரிய உதயம் வந்தவுடன் அவை அனைத்தும் வெவ்வேறு திசைகளில் பறந்து சென்று விடுகின்றன. இதைக் குறித்து வருந்தி என்ன உள்ளது?*

*இத3ம் காஷ்ட2ம் இத3ம் காஷ்ட2ம் நத்4யம் வஹதி ஸங்கத:*

*ஸம்யோகாஸ் வியோகாஸ்ச நா தத்ர பரிவேதனா*

*நதியில் இந்தப் பிணமும் அந்தப் பிணமும் ஒன்றாக மிதக்கின்றன. அவை சில மணி நேரங்கள் ஒன்றாகக் கழித்து, பின்னர் பிரிந்து செல்கின்றன. (நம் வாழ்க்கை உறவுகளும் இது போன்றவையே) இதைக் குறித்து வருந்தி என்ன பயன்?*

*இதுவே இந்த ஸ்தோத்ர தொகுப்பின் முடிவு 1 முதல் 4 வரை உள்ள ஸ்லோகங்கள் புராணக் கதை சார்ந்து அமைந்தவை. 5 முதல் 11 வரையுள்ள ஸ்லோகங்கள் சங்கரரால் இயற்றப்பட்டவை என்று கூறப்படுகிறது. அதற்குச் சரியான ஆதாரம் கிடைக்கவில்லை. எப்படி இருப்பினும், உலக வாழ்க்கையின் நிலையாமை பற்றியும், ஆத்ம விசாரம் பற்றியும் மிக ஆழ்ந்த கருத்துகளை இவை எடுத்துரைக்கின்றன. — ஆசிரியர்*

# முருகனாரின் "தெய்வ மாலை" சிறப்புமணிகள்

**உரைஞர்: ரமணசுந்தரராஜன்**

*வாதுக்கு அலைந்து உழல் வெவ்வாதனை சேர் துட்டரை நல்*
*சாதுக்களாக அருட்சால்பு தரும் தெய்வம். (98)*

திறமை மிக்க அறிஞர்கள் சிலர் அடுத்தவர்களை வாதுக்கு இழுப்பதற்கு அலைவார்கள். இழுத்து அவர்களை வேதனைப் படுத்துவார்கள். இந்தத் துஷ்டர்களின் கெட்ட வாசனைகளை, ஆணவத்தை அழித்து, நல்ல சாதுக்களாக மாற்றுகிறார். இத்தகைய அருட் தன்மை பகவானின் தனிச் சால்பு. துஷ்டனும் ஆணவம் நீங்கினால் சாதுவாகி விடுவான். அதுவும் பகவான் அருளால்தான் நடைபெறும். (98)

*அருண மலைச்சாரலில் அன்பாக உறை தெய்வம்*
*கருணைமலி ரமணகுரு கண்ட தெய்வம்.*
*ஏன் இந்த மோக மயக்கு என்று எனைத் தன்பால் எழுப்பி*
*வான் இந்து போல் உளம் துன்று ஆனந்தத் தெய்வம். (99)*
*ஆதார பூத ஞான ஆன்ம சொரூபத்து ஒளிகூர்*
*பாதாரவிந்த மதுபானம் நல்கும் தெய்வம். (101)*

அருணாசல மலைச்சாரலில் அன்பாக ரமண தெய்வம் வாழ்கிறது. ரமண தெய்வம் கருணை மிக்க குருவாகவும் திகழ்கிறது. ரமணர் தன் பக்தர்களுக்குக் கண்கண்ட தெய்வமாக விளங்குகிறார். பகவான் தன் பக்தர்களை, உலக மோக மயக்கத்திலிருந்து எழுப்பித் தன்னிடம் மோகமடையும்படிச் செய்கிறார். வானத்தில் சந்திரன் பொருந்திப் பொலிவது போல், தன் பக்தர்கள் மகிழ்ச்சியில் பொருந்தி ஆனந்திக்கச் செய்கிறார். (99).

உலகின் ஆதாரமாய் விளங்கும் தன் ஆன்ம ஞான சொரூபத்தை, ஒளி மிகுந்த பாதாரவிந்தங்களால் காட்டி மக்களை ஆனந்தப் போதையில் ஆழ்த்துகிறார். *(101)*

*அருள் என்றால் என்ன?*

*அருளாமை என்பது அறியாமையாக*
*அருளால் உருக்கொண்ட ஆனந்தத் தெய்வம். (184)*

பகவான் அருளே உருவான ஆனந்தத் தெய்வம். இறைவன் ரமணன் அருள் புரியவில்லை என்பது அறியாமல் சொல்வது என்கிறார் முருகனார்.

அருள், அருள் என்று இதுவரை 300 முறை எழுதியிருப்பேன். இன்றைக்கு அருள் என்றால் என்ன என்று அலசி ஆராய்ந்து பார்ப்போம்.

நம்மால் முடியாதபோது திறன்மிக்க ஓர் ஆற்றலின் அவசியத்தை உணர்கிறோம். அதுதான் அருள் எனப் படுவது.

இறைவனின் இயற்கையே அருள். இறைவனையே சிந்திக்கும் பக்தன் எளிமையாக இறைவனின் அருளை அனுபவிக்கிறான். இறைவனை நாம் நினைப்பதுகூட இறை அருளால்தான்.

நீங்கள் முழுமையாக இறைவனைச் சரணடைந்தால் முழுமையாக இறை அருளைப் பெற முடியும். பகவானின் அருள், வேலை செய்வதை, மிகக் கடினமான பிரச்சினைகூட மிக எளிதாக இயல்பாகத் தீர்க்கப்படுவதன் மூலம் நாம் உணர முடியும். அதற்கு இயல்பாகச் சரணடைய வேண்டும். எதனையும் எதிர்பார்க்காமல் சரணடைய வேண்டும். நம்மிலும் உயர்ந்ததோர் எல்லாம் வல்ல ஆற்றலிடம் நம்மை முற்றிலும் ஒப்புவித்துக் கொண்டால் தடைகள் நிற்க முடியுமா? தடைகளை மூலப்பொருளிடம் ஒப்புவித்து விட்டால் அதுவே மற்றவற்றைப் பார்த்துக் கொள்ளும்.

முற்றிலும் சரணடைந்தால் அருளை வேண்டுவதற்குக் கூட அங்கே ஒருவரும் இல்லை.

கடவுள், குரு, அருள் ஆத்மா எல்லாம் ஒன்றே. அருள் எப்போதும் நம்மிடமே இருக்கிறது. அருளின் இயக்கம் இல்லாத இடமோ காலமோ இல்லை. சீடன் பக்குவப் படும்போது இறைவனே குருவாய் வந்து அருள்கிறார் குரு அருளால், வைராக்கியம், தத்துவ ஞானம், ஸ்வரூப நிஷ்டை ஆகியன கை கூடுகிறது.

ஆத்மாவிலிருந்துதான் அருள் வெளிப்படுகிறது. எனவே ஆத்மாவை உணர்ந்தவன் அருளே வடிவாய் அமர்ந்திருப்பான். ஆத்ம சரணாகதி செய்தால் அருள் கிடைக்கும்.

அஞ்ஞானம் அகன்றால் ஆத்மா வெளிப்படும். ஆத்மாவின் சகஜப்பிரகாசமே அருள். தானே அதுவாய், அதுவே தானாய்த் துலங்கும் மோனத்தில் நிலைத்தவன், அருளால் விழுங்கப் பட்ட பேரருளாளன்.

குறிப்பு: அருளைப் பற்றி பகவத் வசனாம்ருதத்தில் பகவான் குறிப்பிட்ட கருத்துகள்

---

## ரமணோதயம்
## Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778

## பௌர்ணமி நாட்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நவம்பர் | 18 | வியாழன் | நண்பகல் 12 | 19 | வெள்ளி | மதியம் 2.25 |
| டிசம்பர் | 18 | சனி | காலை 7.24 | 19 | ஞாயிறு | காலை 10.05 |
| ஜனவரி | 17 | திங்கள் | அதிகாலை 3.18 | 18 | செவ்வாய் | அதிகாலை 5.17 |
| பிப்ரவரி | 16 | புதன் | இரவு 9.42 | 17 | வியாழன் | இரவு 10.25 |

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### 22. ஸ்ரீஅரவிந்தர் ஆஸ்ரமத்தில்

ஒருநாள் என் அன்பர் ஒருவர் இன்னும் சில வாரங்களில் அரவிந்த ஆஸ்ரமத்தில் ஸ்ரீஅரவிந்தர் தர்ஸனம் தரும் நிகழ்ச்சி நடைபெறப் போவதாக அறிவித்தார். பாண்டிச்சேரியில் ஆண்டுக்கு இருதினங்கள் மட்டுமே நடைபெறும் நிகழ்ச்சி இது.

மேலை நாடுகளில் சிறப்பாகப் பரவி இருந்த அவரது தத்துவக் கருத்துகள் அடங்கிய நூல்களை நானும் பயின்றுள்ளேன். சில ஆண்டுகட்கு நான் பாரிஸ் நகரில் இருந்தபோது ஸ்ரீஅரவிந்தரின் பேச்சுகளில் இருந்தும், பொன்மொழிகளில் இருந்தும் தேர்ந்தெடுக்கப் பட்டவை குறித்த ஒரு நூலைப் பயின்றுள்ளேன். அந்த நூல் துணிவான மற்றும் தெளிவான கருத்துக்களை உள்ளடக்கி இருந்ததால் அச்சமயம் என் கருத்தைக் கவர்ந்தது. மறைபொருள் நிலையைப் பயில்விக்கும் சித்தாந்தம் பாண்டிச்சேரியில் ஸ்தாபிக்கப்பட்டு கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய ஆன்மிகக் கருத்துக்களையும் பண்பாட்டினையும் இணைக்கும் பாலமாக அமைந்தது. அதில் ஆன்மிக எழுச்சி பெற்ற பல அறிஞர்கள் அங்கம் வகித்து எதிர்காலத்து தலைமுறையை வழிநடத்துபவர்களாக உருவெடுத்தனர். இஃதறியாத பாமரர்கள் அரவிந்த ஆஸ்ரமத்தை ஒரு மந்திர-மாயப் பயிலகம் என எண்ணினர்.

இந்தத் தரிசனம் பெறவேண்டும் எனில் ஒருவர், எழுத்து மூலம் முன்அனுமதி பெறவேண்டும். ஆஸ்ரம அலுவலர் எவரையும் தெரிந்திராவிடில் இச்சிறப்பு

அனுமதி பெறல் கடினம் என்று அறிந்தேன். எனினும், எப்படியோ எனக்கு அனுமதி கிடைத்து விட்டது. ஆகஸ்ட் 14 அன்று அரவிந்த ஆஸ்ரமம் நோக்கி, நான் பாண்டிச்சேரி டிரெயினில் சென்றேன்.

பாண்டிச்சேரி மிகத் தொலைவில் இல்லாவிடினும், சுங்கச் சோதனை முதலிய கட்டுப்பாடுகளினால் இரண்டு-மூன்று மணி நேரம் காலதாமதம் ஆனது. ரயில்வே ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தவுடனேயே, நகர் முழுவதும் ப்ரெஞ்சுக் கொடிகளாலும், இந்தியக் கொடிகளாலும் அலங்கரிக்கப் பட்டு இருந்தன.

அது ஒரு ப்ரெஞ்சுக் காலனியாய் இருந்தபோதிலும் அங்கு வாழும் இந்தியர்களைக் கருத்தில் கொண்டு பாண்டிச்சேரியின் கவர்னர், அரசாங்க அலுவலகங்களில் ப்ரெஞ்சுக் கொடியுடன் இந்தியக் கொடியையும் பறக்க விடுமாறு கூறி இருந்தார். நகர் முழுவதும் கோலாகலமாகத் திகழ்ந்தது. ‘செனகல்’ எனப்படும் ப்ரெஞ்சுக் காலனியில் இருந்து வந்திருந்த கறுப்பினப் போலிஸ் ஊழியர்கள் சைக்கிள்களில் எங்கனும் சுற்றிக்கொண்டு இருந்தனர். ஓர் இந்தியக் காவலாளி எனக்கு ஆஸ்ரமம் செல்லும் வழியைக் காட்டிக் கொடுத்தார்.

ஆஸ்ரமத்தின் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலகங்களில் பல்வேறு கட்டிடங்கள் இருந்தன. ஆஸ்ரமம் நிர்வாகம் மிக்க திறமையுடன் செயல்பட்டு, உறைவிடம் மற்றும் உணவு நாடி வருவோர்க்கு சிறப்பாக வழிகாட்டியது.

தர்ஸன நேரம் மதியம் 3 மணி எனத் தரப்பட்டு இருந்தது. வருகையாளர்களுக்கு உணவு தரும் ஒர பெரிய உணவுக்கூடத்தில் நான் அமர்ந்து இருந்தேன். சிறப்பாகச் சமைக்கப்பட்ட சைவ உணவு வருகையாளர்க்கு வழங்கப்பட்டது. ‘தேவை’ என்று கேட்பவர்க்கு

ரொட்டியும் பாலும் வழங்கப்பெற்றது. பாதிப்பேர் இந்தியராகவும், மிகுதிப்பேர் ஐரோப்பியராகவும் இருந்த அந்த விநோதமான கலவைக் கூட்டத்தில், தரையில் விரிக்கப்பட்ட சிறுபாய்களின்மீது அமர்ந்து சிறு உணவு மேடைகளின் மேல்வைக்கப்பட்ட இந்திய உணவுகளை அவர்கள் கத்தியும் முள்கரண்டியும் கொண்டு உண்டனர். அங்கிருந்த மேல்நாட்டினரில் ஒரு பகுதியினர் நிரந்தர ஆஸ்ரமவாசிகள். ஏனையோர் தற்காலிக வருகையாளர்கள்.

ஆஸ்ரமம் அருகில் உள்ள தெருக்கள் முழுதும் நவீனமான கார்களால் நிறைந்து காணப்பட்டன. சீதோஷ்ணநிலை மிக வெப்பமாய் இருந்ததால், அருகில் இருந்த கடைகளில் இருந்த குளிர்பானங்கள் விரைவில் விற்கப்பட்டு தீர்ந்துபோயின. மித வெப்பநிலையில் இருந்த தண்ணீரையே குடித்து, என்போன்ற சிலர் தாகத்தைத் தணித்துக் கொண்டோம். அங்கிருந்த சிறு துறைமுகத்தையும் அதில் கயிற்றினால் மர நங்கூரத்தில் பிணைக்கப்பட்ட சிறு கப்பல்களையும் பார்த்த பின்னர், ஒரு மரத்தின் அடியில் சிறிது கண்ணயர முயன்றேன். ஆனால், அருகில் பெருங்கடல் இருந்தாலும், உஷ்ணம் ஏனோ குறையவே இல்லை.

மூன்று மணிக்கு ஆஸ்ரமத்தின் கதவுகள் திறக்கப்பட்டன. நால்வர் நால்வராய் வரிசையில் கிட்டத்தட்ட 2000 பேர்கள் அணிவகுத்து நின்றனர். இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும், உலகின் பல்வேறு நாடுகளும் இங்கே பிரதிநிதித்வம் பெற்று இருந்தன.

நீண்டநேரம் வரிசையில் காத்திருந்த பின்னர் நான் ஸ்ரீஅரவிந்தரின் இல்லத்தை அடைந்தேன். சுவர்களில் ஸ்ரீஅரவிந்தர் படங்களும், ஃபிரெஞ்சு முன்னாள் பேரழகியும் நடிகையுமான அன்னை என்று பக்தர்களால் அழைக்கப்பட்ட அவரது ஸகயோகினியின் படங்களும் அலங்கரித்தன.

*ரிஷி அரவிந்தர் லோகாயத விஷயங்களில் சிறிதும் ஈடுபடாது, முற்றிலும் தவவாழ்க்கையை நடத்தி வருகிறார். ஆஸ்ரமவாசிகளான 200 சிஷ்யர்களையும் அன்னையே சிறிதும் சிரமம் இன்றி வழிநடத்தி வருகிறார். ஆஸ்ரமத்தில் இணைந்தவர்கள் தங்கள் உலகப் பொருட்கள் அனைத்தையும் ஆஸ்ரமத்திற்கே ஈன்று விடுகின்றனர். அவரது தேவைகளை ஆஸ்ரமமே கவனித்துக் கொள்கிறது.*

*இங்ஙனம் அவர்தம் உலகாயதப் பொறுப்புகளும் கவலைகளும் நீங்கிய பின்னர், இந்த அமைப்பின் ஒவ்வொரு அங்கத்தினரும் அன்னையின் கட்டளையை முற்றுலும் ஏற்று நடக்கின்றனர். ஒவ்வொருவரும் தமக்குக் கைவந்த தொழிலையே இங்கும் பின்பற்றிச் செய்வதால் ஆஸ்ரமம் முற்றிலும் சுயதேவைப் பூர்த்தியுடன் விளங்குகிறது. இதனை ஒரு மடாலயத்தின் ஒழுங்குடன் ஒப்பிடலாம்.*

*இங்குக் கண்டிப்பான கடமைப்பட்டியலும், பாடத் திட்டங்களும், தியானப் பயிற்சியும் பின்பற்றப் படுகின்றன.*

*இந்த வரிசையைப் பின்பற்றி நான் நடந்து கொண்டு இருந்தபோது சுவரில் வரையப்பட்டு இருந்த பட்டயங்களில் மிகச் சிறந்த ஒழுங்குநெறி தியானமும், மௌனமுமே என்று எழுதப்பட்டு இருந்ததைக் கண்டேன்.*

*அன்னை ஒரு தீர்க்கதரிசனம் மிக்கவர் என்று கூறப்படுகிறது. சிலசமயம், ஆன்மிக உணர்வு சற்றுமின்றி, வெறும் ஆராய்ச்சி நோக்குடன் வருபவர்தமை இனம்கண்டு ஸ்ரீஅரவிந்தரைக் காண அனுமதிக்காமல், திருப்பி அனுப்பப்படுகின்றனர்.*

*அறைவாசலை நாங்கள் அடைந்தபோது, ஸ்ரீஅரவிந்தரும் அன்னையும் அந்த அகன்ற*

நுழைவாயிலில் அமர்ந்திருப்பதைக் கண்டோம். அவரது இடமும் வலமும், மலர்களுக்காகவும், பரிசுப் பொருட்களுக்காகவும் வைக்கப்பட்டிருந்த இரு பெரிய பெட்டகங்கள் இருந்தன. அப்போது அந்த அற்புத இருவரையும் கண்டேன். நான் இருந்த வரிசை மெதுவாக நகர்ந்து கொண்டு இருந்ததால், அவ்விருவரையும் நான் பூர்ணமாகத் தரிசிக்க முடிந்தது. அவர்கள் இருவரும் எந்த ஓர் அசைவும் இன்றி முழுச் சமாதி நிலையில் அமர்ந்து இருந்தனர்.

ஸ்ரீஅரவிந்தர் ஆஜானுபாஹுவான தோற்றத்துடன் வெண்ணிற ரோமங்களுடன், ஓர் இந்தியன் போல் அல்லாது ஐரோப்பியர் போலத் தோற்றம் அளித்தார். அவரது அகன்ற நெற்றி, அவர்தம் பேரறிவை எடுத்துக் காட்டியது. ஊடுருவி நோக்கும் அவரது கண்கள் பராகாசத்தில் நிலைத்து இருந்தன. மிகச் சக்தி வாய்ந்த ஆன்மிகக் கதிர்களை அவ்விருவரையும் சூழ்ந்து இருப்பதை என்னால் உணர முடிந்தது.

அன்னையின் முகத்தின் ஒருபகுதி அவரது புடவையுடன் இணைக்கப்பட்ட ஒருமுகப் படாத்தினால் மூடப்பட்டு இருந்தது. அவரது கண்களை என்னால் நோக்க இயலவில்லை. அவரது தேகம் முழுவதும் அவரது தீவிர தியானம் கதிர் வீசியது.

74 வயதான ஸ்ரீஅரவிந்தரைக் காட்டிலும் வயது முதிர்ந்தவராக அவர் தோற்றம் அளித்தார். அவரிடமிருந்து 12அடி அருகாமையில் நான் நெருங்கியபோது, என்னுடைய தொண்டையையும், கழுத்தினையும் நெருக்கப்படுவதுபோன்று உணர்ந்தேன். அச்சமயம் என்னால் ஒரு வார்த்தைகூட பேசி இருக்க இயலாது. எனது குரல்வளையில் வாதம் பற்றிச் செயலிழந்ததுபோல் உணர்ந்தேன். மிகவும் மெதுவாக அடிமேல் அடிவைத்து, வரிசையில் முன்னேறுவது தவிர வேறு ஒன்றையுமே செய்ய இயலவில்லை. எனது

மனம் மட்டும் மிகத் தெளிவாக இருந்தது. அதேசமயம் எனது பௌதிக உடல் கண்ணுக்குத் தெரியாத ஒரு சக்தியால் கட்டுப்பட்டதுபோல் தோன்றியது. என்னை ஹிப்நோடிக் மயக்கத்துக்கு எளிதில் ஆட்படுத்த முடியாது என்பதை நான் அறிவேன். இது ஏதோ ஒரு வரம்பற்ற சக்தி. இந்த வினோத உணர்ச்சி மேலும் பன்னிரெண்டு அடிகள் எடுத்து வைக்கும்வரை நீடித்தது. அதன்பின் எல்லாம் சஹஜ நிலைக்குத் திரும்பியது. மீண்டும் பேசும் சக்தியை நான் பெற்றேன். எனினும் ஸ்ரீஅரவிந்தரையும் அன்னையையும் நான் கடந்து செல்லும்வரை இந்த அமானுஷ்ய மௌனம் நீடித்தது.

ஸ்ரீஅரவிந்தர் முன்னிலையில், இதைத்தான் நான் உணர்ந்தேன். பகவான் ரமணரின் சந்நிதியில் நான் பெற்ற உன்னதமான ஆன்மிகப் பொழிவை இங்கு நான் பெறவில்லை என்பது உண்மையே. அவரிடமிருந்து நான் அடைந்த அற்புதமான உள்ளார்ந்த தொடர்பையும், உயிர்த்தொடர்பான ஆன்மிக உத்வேகத்தையும், இங்கு நான் உணரவில்லை. தவறாக எண்ண வேண்டாம்! எனது நோக்கம் ஒப்பீடு செய்வதல்ல. ஸ்ரீஅரவிந்தரின் சில சீடர்களுடன் நான் பேசும்போது அவர்கள் எங்ஙனம் அவரை மிக உன்னத நி்லையில் வைத்துத் தொழுகிறார்கள் என்பதைக் கூறியுள்ளனர். அவரது திருவடியில் அவர்கள் அற்புதமான ஆன்மிகத் தாக்கத்தைப் பெற்றனர் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. எனினும், ஒவ்வொரு சாதகனுக்கும் தனக்கேற்ற வழிகாட்டியாய் குருவே வந்து அமைவர் என்பது உண்மை. எனக்கு ஏற்ற குரு ஸ்ரீஅரவிந்தர் அல்ல என்பதை என் உள்ளுணர்வால் அறிந்தேன்.

பின்னர் ஆஸ்ரமத்தில் உள்ள சிறந்த நூல் விற்பனை நிலையத்திற்கும் நூல் நிலையத்திற்கும் சென்றேன். ஸ்ரீஅரவிந்தரின் நூல்கள் மட்டுமல்லாது நான் பலநாட்களாக அறிந்துள்ள தகைசால் நண்பர் பலரின்

நூல்களும், கிழக்கு மற்றும் மேல்திசைச் சார்ந்த மறைபொருள் நூல்களும், தத்துவ நூல்களும், ஆழ்மனச் சக்திகளை எங்ஙனம் மேம்படுத்துவது என்பது பற்றிய பல நூல்களும் இங்கு இருப்பது கண்டு பிரமிப்பு அடைந்தேன். மறைபொருள் ஆய்வு (Occultism) பற்றிய நூல் பலவும் இங்கு இருந்தன. பெரும்பாலும் ஆங்கிலம் மற்றும் ஃபிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட இந்த நூல்கள் மட்டுமன்றி யோகம், தியானம், அறிதுயில் (Hyptinotism) முதலிய தலைப்புகளிலும் இருந்தன. ஆயினும் கவர்ந்து இழுக்கக்கூடிய ஆற்றல் பெற்ற இந்தத் தொகுதிகளால் ஈர்க்கப்படும் நிலையை நான் எப்போதோ கடந்துவிட்டேன். பகவான் காட்டும் விசார வழியைத் தவிர வேறு எதுவுமே என்னை ஈர்ப்பதில்லை. பகவான் காட்டும் நேர்வழியான ஆன்மவிசாரம், மற்ற எல்லா வழிகளையுமே புறந்தள்ளி விட்டது. எல்லாவற்றையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற பேராவல் எனைவிட்டு நீங்கத் தொடங்கி விட்டது. வாஸனைகளின் தூண்டுதல் பெரும்பாலும் என்னை விட்டு நீங்கத் துவங்கிவிட்டது. நான் பல்லாண்டுகளாகத் தேடிவந்த மனச் சாந்திஎங்கிருந்து, எப்படிக் கிடைக்கும் என்பதை நான் அறிந்து கொண்டேன். என்னுடைய முன்னாள் மற்றும் இந்நாளின் ஆன்மிக முயற்சியின் ஒப்பீடே எனது அரவிந்த ஆஸ்ரமத்தின் பலன்.

மாலை நேரங்களில் ஆஸ்ரமத்தின் பெரிய கூடத்தில் நடைபெறும் தியானம் மற்றும் வழிபாடு நிகழ்ச்சிகளில் நான் கலந்தகொண்டேன். எல்லாமுமே தெளிவாகவும், இணக்கத்துடனும், ஆழ்ந்த உட்பொருள் கொண்டு முன்னேறத் தொடங்கிவிட்டது. வெள்ளுடை அணிந்த வெளிநாட்டு வருகையாளர்களும், அரங்கத்தில் நிறைந்தனர். குறைந்த நேரம் மட்டுமே ஸ்ரீஅரவிந்தரும் அன்னையும் அரங்கத்திற்கு வந்து இருந்தனர். கண்ணியமும் ஆழ்ந்த மனஒருமைப்பாடும் ததும்பும் அவர் திருமுகத்தில் புனிதத் தன்மையும் ஆன்மிக

உள்ளுக்குமுன் ஒளிவீசின. ஆயினும், இத்தகு பாண்டிச்சேரியின் மேல்திசையில் பல நூறு மைல்கள் தாண்டி, கட்டப்பட்ட ஒரு கல் கோயில்தான் இருந்தது. அங்கே, சுற்றிலும் சில சீடர்கள் அமர்ந்திருக்க ஊதா நிறபுகைச் சூழலுக்கு ஊடே காணப்பட்ட, ஓர் அற்புத உரு அமர்ந்து இருந்தது. அதுவும் தன் இறுதி நாட்களை நெருங்கிக்கொண்டு இருந்தது. வாழ்வில் சிக்கல் நிறைந்தபோது, இறைவனின் பெருங்கருணை அவரை நாட எனக்கு வழிகாட்டியது. அவர் ஆத்ம ஜோதியைத் தூண்டிவிட்டு, தன்னைச் சுற்றிலும் கண்ணுக்குத் தெரியாத அற்புத ஒளியைப் பரப்பி, நம் உள்ளத்தின் அடி ஆழத்தில் மறைந்துள்ள அதே ஒளிக்கு மீண்டும் உயிரூட்டி மேல்வரச் செய்கிறார்.

நாம் காணும் எல்லாத் தத்துவங்களுக்கும் உபதேசங்கட்கும் அடித்தளமாக இந்த ஆன்ம ஜோதியே அமைகிறது. நாம் அருணாசல மாமுனிவரின் முன் அமரும்போது, நம் எல்லாத் தேவைகட்கான உதவியும் அவரிடமிருந்து பெறப்படுகிறது. இந்தப் பேரொளியில் இருந்து, நம் மனதின் பரிபாஷையில் இருந்து வெளிப்படும் எல்லா அறிவையும் அடையலாம். எல்லா தீட்சைகட்கும் இந்தப் பேரொளியே ஆதாரம். அந்த ஒளியின்றி, எந்த ஆன்மிக நூலையுமே நாம் படித்துணர முடியாது. நம் மனமும் இந்தப் பேரொளியின் அருளின்றி சாந்தியை அடைய முடியாது. இந்த ஆன்மப் பேரொளியே உலகின் மையம். பௌதிக உலகினை ஊடுருவி அஞ்ஞானத்தைக் கட்டவிழ்க்கும் எல்லாக் கதிகளும் இதிலிருந்தே தோன்றுகின்றன.

'காட்டு ஆஸ்ரமம்' என்று சிலரால் கூறப்படும் ஸ்ரீரமண ஆஸ்ரமத்தைக் குறித்து, அரவிந்த ஆஸ்ரமத்தின் பக்தர்களிடம் எத்தகை எதிர்மறை உணர்ச்சியும் காணப்படவில்லை. பாண்டிச்சேரி ஆஸ்ரமத்தில் இருந்து பல பக்தர்கள் திருவண்ணாமலை

வந்து, பகவானின் திருவடிக்கீழ் அமர்ந்து, அவரிடம் ஐயம் தெளிந்து செல்கின்றனர்.

இத்தகைய ஐயம் தெளிவிப்பு, ஆஸ்ரமத்தின் பல சாதகர்களின் டைரிகளில் குறிப்பிடப்பட்டு உள்ளது. ஸ்ரீரமணாஸ்ரமத்தின் பொன்விழா மலரில் அரவிந்த ஆஸ்ரமத்தில் இருந்த இரண்டு சாதகர்களின் கட்டுரைகள் இதை விவரிக்கின்றன.

# இனிவரும் திருநாட்கள்

## 2021

| | | | |
|---|---|---|---|
| நவம்பர் | 4 | வியாழன் | தீபாவளி |
| | 10 | புதன் | கார்த்திகை தீபோற்சவம் துவக்கம் |
| | 19 | வெள்ளி | கார்த்திகை தீபம் |
| டிசம்பர் | 21 | செவ்வாய் | பகவானது 142ஆவது ஜயந்தி |

## 2022

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 14 | வெள்ளி | பொங்கல் விழா |
| | 17 | திங்கள் | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| பிப்ரவரி | 21 | திங்கள் | சுந்தரம் ஐயர் தினம் |
| மார்ச் | 1 | செவ்வாய் | மஹா சிவராத்திரி |
| | 18 | வெள்ளி | ஸ்ரீவித்யா ஹோமம் |
| ஏப்ரல் | 2 | சனி | தெலுங்கு வருடப் பிறப்பு |
| | 10 | ஞாயிறு | ஸ்ரீராம நவமி |
| | 14 | வியாழன் | தமிழ் வருடப் பிறப்பு |
| | 28 | வியாழன் | ஸ்ரீபகவானது 72ஆவது ஆராதனை |
| மே | 7 | சனி | மஹா பூஜை |
| ஜூலை | 10 | ஞாயிறு | பசு லக்ஷ்மி தினம் |
| | 13 | புதன் | குரு பூர்ணிமா |

# ரமண மையங்களை நோக்கி...

## "வலுப்பெற்று வளரும் விழுதுகள்" பொள்ளாச்சி ரமண மையம்

*1955-ஆம் ஆண்டு கார்த்திகை தீப தரிசனத்திற்காக பொள்ளாச்சியிலிருந்து திருவண்ணாமலைக்கு ஒரு தம்பதியினர் ரமணாச்ரமம் வந்திருந்தனர். இதற்கு முன்னர் அவர்கள் பல தீப தரிசனத்திற்கு வந்திருந்தாலும் அந்த ஆண்டு அவர்களுக்கு மிகவும் விசேஷமானது. ஏனென்றால் இந்தமுறை அவர்களுடன் விரைவில் இப்பூவுலகில் அடியெடுத்து வைக்கக் காத்திருக்கும் ஒரு 7 மாத சிசுவும் உடன் பயணித்திருந்தது. ஒவ்வொரு வருடமும் தீபம் ஏற்றிய தினத்திலிருந்து 11 நாட்கள் தங்கியிருந்து தீபதரிசனம், அக்ஷரமணமாலை பாராயணம் அதன்பிறகு கிரிவலம் செல்வதை அன்றாடக் கடமைகளாக வைத்திருந்து அதன்பின்னே அவர்களுடைய ஊருக்குத் திரும்புவது அவர்களுடைய வழக்கம். ஆனால் இந்த முறை தீப நாளிலிருந்து தொடர்ந்து 10 நாட்கள் தீபத்தை அவர்களால் தரிசனம் செய்ய முடியாத அளவிற்கு வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் அவர்கள் ஊருக்குத் திரும்பும் நாளும் வந்தது. அன்றைய தினமும் அவர்களால் தீபத்தை தரிசிக்க முடியவில்லை. மிகவும் மனம் வாடிய நிலையில் திருவண்ணாமலை ரயில் நிலையத்திற்குப் புறப்பட்டனர். அவர்களை வழியனுப்புவதற்கு பகவானின் அணுக்கத் தொண்டரான குஞ்சு சுவாமிகள் உடன் வந்திருந்தார். அவர்கள் முன்பதிவு செய்யப்பட்ட இருக்கையில் அமர்ந்த சில நொடிகளில் வண்டி புறப்படத் தயாரானபோது மேகங்கள் மெல்ல நகரத் தொடங்கி தீபம் சுடர் விட்டு எரிவது நன்கு தெரிந்தது.*

இந்தத் தரிசனத்திற்காகவா அருணாசலேஸ்வரர் இத்தனை நாட்கள் காக்க வைத்தார். 'அண்ணாமலைக்கு அரோஹரா!' என்று கண்ணீர் மல்க இருகரம் கூப்பி வணங்கினர். உடனே குஞ்சு சுவாமிகள், "ஓஹோ! சரிதான். இதுதான் விஷயமா!" என்றுகூறி "பையன் பிறந்தால் 'ரமணன்' என்றும் பெண் என்றால் 'ரமணி' என்றும் பெயர் வைக்கவும் என்றுகூறி வாழ்த்தி அனுப்பி வைத்தார். அடுத்தே ஆண்டே அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குஞ்சு சுவாமிகள் கூறியபடியே 'ரமண குமார்' என்ற பெயரை வைத்தனர். பகவானது அணுக்கத் தொண்டர் குஞ்சு சுவாமிகளுடன், பகவானுக்குப் பணிசெய்த சோபா கௌண்டர் அவர்களின் பேரனும் அவரது துணைவியுமே இத்தம்பதியர் ஆவர்.

**ஸோஃபா கௌண்டர்:**

திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமம் செல்பவர்கள் கண்டிப்பாக Old Hall எனப்படும் தியான ஹாலில் காணப்படும் சோபாவில் இருக்கும் பகவானின் புகைப்படத்திற்கு முன்பு சிறிதுநேரம் தங்களின் கண்களை மூடி அமைதியாக அமர்ந்திருக்கும் அன்பர்களைத் தவறாமல் காண முடியும். பகவான் தேகத்துடன் இருந்த காலத்தில் அவர் அந்த அறையில் அமர்ந்திருக்கும்போது அவர் அருகில் அமர்ந்து தரிசனம் செய்ய மக்கள் போட்டி போட்டுக்கொண்டு இடத்தைப் பிடிப்பதை வழக்கமாக கொண்டிருந்தனர். சில சமயங்களில் அன்பர்கள் பகவானின் கால்களைப் பிடித்துவிடுவது வழக்கம். இதைக்கண்ணுற்ற ஒரு அன்பர், பகவான் அமர்வதற்கு வசதியாக ஒரு சோபா இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணி உடனே ஊருக்குள் விரைந்து சென்று நல்ல ஈட்டி மரமாகத் தேர்ந்தெடுத்து 3 நாட்கள் தங்கியிருந்து ஒரு அருமையான சோபாவை தயார் செய்து ரமணாஸ்ரமம் கொண்டு வந்தார்.

*பகவான் தனக்கு மட்டும் தனி சலுகை அளிப்பதை விரும்பாதவர் என்பது ரமண பக்தர்கள் அனைவரும் அறிந்ததே! அப்படியிருக்கையில் இந்த சோபாவைக் கண்டதும் அந்த அன்பரை மிகவும் கடிந்து கொண்டார் பகவான். என்ன நடந்தாலும் பரவாயில்லை; பகவான் அந்த சோபாவில் அமரும்வரை உணவு உண்ணப்போவதில்லை என்று உறுதிபூண்டார் அந்த அன்பர். இதைக் கண்ட மற்ற அன்பர்கள் பகவானிடம் சென்று அவருடைய நிலையையும் மேலும் பகவான் அந்த சோபாவில் அமர்ந்தால் தாங்கள் எல்லோரும் எளிதில் பகவானைத் தரிசனம் செய்ய முடியும் என்ற கருத்துக்களை முன்வைத்து அவரை சமாதானம் செய்து அமரவைத்தனர். பகவானுக்கு சோபா அளித்ததால் அந்த அன்பர் சோபா கவுண்டர் என்று அழைக்கப்பட்டார்.*

***வடிவுடையார்:***

*கோவை மாவட்டம் பல்லடம் அருகே ஒரு சிறு கிராமத்திலிருந்து ஒரு முதியவர் அடிக்கடி திருவண்ணாமலை சென்று ரமண பகவானைத் தரிசனம் செய்து சிறிதுகாலம் அங்கே தங்கியிருந்து பிறகு தன்னுடைய கிராமத்திற்குத் திரும்பி வருவதை வழக்கமாக கொண்டிருந்தார். இப்படியே நாட்கள் சென்று கொண்டிருக்கையில் ஒருமுறை தான் குடும்பத்தை விட்டு நிரந்தரமாகப் பிரிந்து ரமணாஸ்ரமம் செல்வதாகக் கூறினார். அதற்கு அவர்கள் குடும்பத்தினர் தங்களுடனே காவி உடுத்திக்கொண்டு சன்னியாசியாக இருக்கலாம் என்று எவ்வளவு கூறியும் அவர் முடிவை மாற்றிக்கொள்வதாக இல்லை. எப்படியோ குடும்பத்தினர் சமாதானமாகினர். ஆனால் அந்தக் குடும்பத்திலிருந்து ஒரு சிறுமி மட்டும் தன் தாத்தா தங்களை விட்டு பிரியப் போவதை எண்ணி மிகவும் வருத்தமுற்று அழுது கொண்டேயிருந்துள்ளார். அந்த முதியவர் சுமார் 38 ஆண்டு காலம் ரமணாஸ்ரமத்தில் பணி செய்து வந்த வடிவுடையார் ஆவார்.*

*கட்டுரையின் முதல் பத்தியில் குஞ்சு சுவாமிகளால் ‘ரமணகுமார்’ என்று பெயர் வைக்கப்பட்ட அந்த அன்பர் இந்த சோபா கவுண்டரின் பேரனின் மகன் ஆவார். கட்டுரையின் இரண்டாம் பத்தியில் தன் தாத்தா வடிவுடையார் தங்களை விட்டுச் செல்வதைக் கண்டு வருத்தமுற்ற சிறுமி தமயந்தி. 1984-ஆம் ஆண்டு ரமண குமார்-தமயந்தி இவர்களின் திருமணம் நடைபெற்றது. இவர்களின் திருமணத்திற்கு குஞ்சு சுவாமிகள், பங்கஜாக்ஷி அம்மா எழுதிய வாழ்த்து மடல் கிடைத்தது மிகப் பெரிய பகவத் பிரசாதமே. திருமணம் முடிந்த கையோடு இவர்கள் சென்ற முதல் இடம் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமம். இவர்களை வரவேற்ற அப்போதைய தலைவர் திரு.T.N.வெங்கட்ராமன் இந்தத் திருமணம் பகவானால் நிச்சயக்கப்பட்டது. பகவான் ரமணரின் அருள் இன்றுபோல் என்றும் உண்டு என்று கூறினார்.*

*ரமண குமார்-தமயந்தி தம்பதியர் தங்களது முன்னோர்களைப் போன்றே ரமணரின் பணியில் சிறந்து விளங்குகின்றனர். தங்களது பொள்ளாச்சி இல்லத்தில் சத்சங்கங்கள் நடத்துவதோடு, பொள்ளாச்சியின் மையப் பகுதியில் அமைந்துள்ள 1000 ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்த சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரமணரின் ஆராதனை, ஜெயந்தி விழாக்களை சிறப்பாகக் கொண்டாடுவதும், சத்சங்கங்களை நடத்தி அருணாசல ரமணனின் புகழ்பாடி பாராயணங்கள், சொற்பொழிவுகள் என ஏற்பாடுகள் செய்வதையும் தொண்டாகக் கொண்டு வாழ்கிறார்கள்.*

*இந்த சத்சங்கங்களில் அருகில் உள்ள மலையாண்டிப் பட்டின அக்ஷரமணமலை சேவை மைய அன்பர்கள் பாலசுப்ரமணியன் போன்றோரும், கோவையில் இருந்து மோகன்தாஸ் போன்ற அன்பர்களும் தவறாது வந்து பங்காற்றுவது, பொள்ளாச்சி மையத்தின் சிறப்பு அம்சமாகும். திரு. ரமண குமார் மற்றும்*

*திருமதி. தமயந்தி அவர்களின் அருமை இவர்கள் தங்களின் பாட்டனார்களான சோபா கௌண்டர் மற்றும் வடிவுடையார் அவர்களின் மேன்மையை வருவோர் போவோர்களிடம் கூறிக்கூறி பொங்கிப் பரவசப் படுவது, கேட்கும் ரமண பக்தர்களை மெய்சிலிர்க்க வைக்கும். ரமணோதய அன்பர்களும் அதனை அனுபவிக்க அவர்களின் கூற்றை அப்படியே அளிக்கிறோம்.*

*இனி திரு.ரமண குமார் அவர்கள் தன் அனுபவங்களை நம்மோடு பகர்ந்து கொள்வார்.*

*என்னுடைய (திரு. ரமண குமார்) கொள்ளுத் தாத்தா ரங்கசாமி கவுண்டர் (சோபா கவுண்டர்) பொள்ளாச்சியிலிருந்து 13 கி.மீ தொலைவிலிருக்கும் புதுப்பாளையத்தில் வேதாந்த வகுப்புகள் நடத்தி வந்தார். இதற்குப் பாடம் கற்றுக் கொள்வதற்காக பாலக்காட்டிலிருந்து குஞ்சு சுவாமிகள், திருக்களர் கிருஷ்ணானந்தா சுவாமிகள் மற்றும் 7 பேர் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பாளையம் வந்து செல்வது வழக்கம். இந்த வகுப்புகள் 1960 (சோபா கவுண்டர் விதேக கைவல்யம் ஆன ஆண்டு) வரை தொடர்ந்து நடைபெற்றது. எனக்கு அப்போது நான்கு வயது. அதன் பின்னர் பங்குனி மாத அவிட்ட நட்சத்திரத்தில் சோபா கவுண்டர் பகவானின் திருவடிகளில் கலந்ததையொட்டி ஒவ்வொரு ஆண்டு பங்குனி மாதத்தில் வரும் அவிட்ட நட்சத்திரத்தன்று (சோபா கவுண்டர் ஆராதனை) குஞ்சு சுவாமிகள் புதுப்பாளையத்திற்கு வந்து சுமார் 1.5 மாதம் தங்கிச் செல்வார். அங்கே சாதுக்கள் தங்குவதற்கென பல அறைகள் சமையற்கூடத்துடன் கட்டியிருந்தார் சோபா கவுண்டர். இந்த 1.5 மாத காலத்தில் குஞ்சு சுவாமிகள் அங்கு வந்திருப்பதை அறிந்து அருகிலிருக்கும் பல கிராமத்திலிருந்து மக்கள் சிலர் வருகை புரிவர். பகவான் தேகத்துடன் இருக்கும்போது நடந்த சம்பவங்களை சுவைபட கண்களின் ஓரம் நீர்*

கசிய குஞ்சு சுவாமிகள் எடுத்துக்கூறும் அழகு நம்மை அக்காலகட்டத்திற்கு எடுத்துச் செல்லும். இது இரவு உணவிற்குப் பின்னரும் தொடரும். அதன்பின்னர் அனைவரும் அங்கேயே உறங்கிக் கொள்வோம். இந்தச் சம்பவங்கள் அனைத்தும் 1987-ஆம் ஆண்டுவரை தொடர்ந்து நடைபெற்றது. அதன் பின்னர் வயது முதிர்வு காரணமாக குஞ்சு சுவாமிகள் புதுப்பாளையம் வருவதை நிறுத்திக் கொண்டார். 1992-ஆம் ஆண்டு குஞ்சு சுவாமிகள் பகவான் திருவடிகளில் கலந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் எங்களுடன் நேரடியாகப் பகிர்ந்து கொண்ட சம்பவங்களை மிகவும் நேர்த்தியாகத் தொகுத்து ‘எனது நினைவுகள்’ என்று புத்தக வடிவில் வெளிக்கொணர்ந்தவர் பகவானின் அணுக்கத் தொண்டரான கடலூர் சோமசுந்தரம் பிள்ளை அவர்களின் புதல்வி திருமதி. பங்கஜாக்ஷி அம்மா அவர்கள்.

1982-ஆம் ஆண்டு நான் ஓசூர் அருகே இருக்கும் பாலக்கோட்டில் ஒரு அரசு அங்கீகாரம் பெற்ற வங்கியில் பணியில் சேர்ந்தேன். வேலை முடிந்ததும் நான் தங்கி இருக்கும் அறைக்குச் சென்று பகவானின் புத்தகங்களைப் படிப்பது என்று நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் நான் படித்துக் கொண்டிருந்தது ‘ஸ்ரீ பகவத் வசனாம்ருதம்’ என்னும் புத்தகம். 1983-ஆம் ஆண்டு ஒருநாள் இரவு நன்கு உறங்கிக் கொண்டிருக்கும்பொழுது உள்ளே தானாக ஒரு எண்ணம் எழுந்தது. இந்த உலகம் பொய், உடல் பொய், அனைத்தும் மாயை என்று பின்னர் திடீரென இரண்டு காதுகளிலும் சாதாரண இதயத்துடிப்பின் சத்தம் கேட்கத் துவங்கியது. அடுத்த சில நொடிகளில் இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்தது. பின்னர் அந்தச் சப்தம் நின்று விட்டது. அதன்பின்னர் பிரணவ ஒலி எங்கேயோ ஒரு கிணற்றுக்குள் ஒலிப்பதுபோல் கேட்கத் துவங்கியது. வார்த்தைகளால் விளக்க முடியாத ஒரு புதுவித

அனுபவம் ஏற்பட்டது. மனம் நன்றாக உள்முகம் திரும்புவதை என்னால் உணர முடிந்தது. சற்று நேரத்தில் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தேன். நல்லவேளை இப்படியே இருந்திருந்தால் நம்மைச் சுற்றி பொதுமக்கள் கூடியிருப்பாரே. நாளை என்னுடைய வங்கி மேலாளர் என்னைத் தேடி ஒரு ஆளை அனுப்பியிருப்பாரே என்று என்னுள் எண்ணிக் கொண்டேன்.

இந்தச் சம்பவங்கள் அனைத்தையும் குஞ்சு சுவாமிகளுக்கு ஒரு சிறிய கடிதத்தில் எழுதி அனுப்பியிருந்தேன். அக்கடிதத்தைப் படித்துவிட்டு உடனே குஞ்சு சுவாமிகள் எனக்கு ஒரு பதில் கடிதம் எழுதியிருந்தார். நீ என்ன வெகு தொலைவிலா இருக்கிறாய் இந்த வார இறுதியில் என்னை வந்து சந்தித்துவிட்டுப் போகவும் என்று அதில் கூறியிருந்தது. அப்போது என்னுடைய தந்தை (நாச்சிமுத்து கவுண்டர்) சேலத்தில் இருந்தார். அவரையும் அழைத்துக்கொண்டு திருவண்ணாமலைக்குச் சென்றிருந்தேன்.

அப்போது குஞ்சு சுவாமிகள் திருவண்ணாமலை ரமண நகரில் இருக்கும் கடலூர் திரு.சோமசுந்தரம் இல்லத்தில் தங்கியிருந்தார். நாங்கள் எழுதும் கடிதத்தை சுவாமிகளிடம் படித்துக் காண்பிப்பது திருமதி. பங்கஜாக்ஷி அம்மா அவர்களே. நான் சென்று சுவாமிகளைத் தரிசனம் செய்துவிட்டு அங்கேயே அமர்ந்து கொண்டேன். என் தந்தையார் சோமசுந்தரம் பிள்ளை வீட்டிற்குள் சென்று அனைவரையும் நலம் விசாரிக்கச் சென்றுவிட்டார். அப்போது நானும் குஞ்சு சுவாமிகள் மட்டுமே இருந்தோம். அப்பொழுது உன்னுடைய கடிதம் கிடைத்தது. ஏதோ பெரிய விஷயங்கள் எல்லாம் எழுதியிருந்தாய். அது வேறொன்றும் இல்லை, ஆத்மாவை நீ உணர்வதின் துவக்கம். ஆனால் சிறிதுநேரம்கூட நீடிக்காமல் வெளியே வந்து விட்டது. தொடர்ந்து பயிற்சி

*செய். குருவருள் உனக்குத் துணை நிற்கும் என்று ஆசியருளினார். பிறகு நான் சுவாமிகளிடம் ஒரு வேண்டுகோள் வைத்தேன். அதாவது என் தந்தை சுவாமிகளுக்கு சிறிதளவு மாத பணம் அனுப்பி வைப்பார். அதை இனிமேல் நான் தொடரலாம் என்று எண்ணியுள்ளேன். அதற்கு சுவாமி அனுமதி தரவேண்டுமென்பதே! உடனே சுவாமிகள், "சற்றுப் பொறு! உன் தந்தையின் பாக்கியே இன்னும் நிறைய உள்ளது. அதை வைத்துகொண்டே நான் என்ன செய்வதென்று தெரியவில்லை. இதில் நீ வேறயா?" என்று கூறினார். அதற்குள் என் தந்தை வந்து சுவாமிகளுக்கு இந்த மாதம் அனுப்ப வேண்டிய பணத்தை பங்கஜாக்ஷி அம்மாவிடம் தந்திருப்பதாகக் கூறினார். உடனே என்னைப் பார்த்த குஞ்சு சுவாமிகள் புன்முறுவல் பூத்தார்.*

*திருமதி. தமயந்தி ரமண குமார் அவர்கள் நம்மிடம் பகிர்ந்து கொண்ட விஷயங்கள் பின்வருபவை: எனது தாத்தா வடுகநாத சுவாமிக்கு இளம் வயதிலேயே ஆன்மிக நாட்டம் அதிகமாயிருந்த காரணத்தினால் சாது சங்கத்தில் அதிகமாக ஈடுபட்டிருந்தார். திருப்பராய்த்துறை சுவாமி சித்பவானந்தர் அவர்களிடம் அளவுகடந்த அன்பும் மரியாதை கொண்டிருந்ததால் சுமார் 7 ஆண்டுகள் வாழ்ந்து வந்துள்ளார். பின்னர் அவருடனே பகவானைத் தரிசிக்க திருவண்ணாமலைக்குச் சென்றுள்ளார். பின்னர் குடும்பத்தைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்து ஆஸ்ரமத்தில் தங்கித் தொண்டு செய்யப்போவதை அறிந்த என்னுடைய குடும்பத்தினர் முதலில் ஏற்றுக் கொள்ளவில்லை. அதன்பின்னர் அவர் முடிவுக்கு எப்படியோ சமாதானமாகினர். அவர் எங்களை விட்டுப் பிரியும் தினத்தன்று என்னால் தாங்கிக்கொள்ள முடியாத சோகம். அவர் எங்கே போகிறார் யாரிடம் போகிறார் என்று அந்த வயதில் தெரியவில்லை.*

ஆனால் எங்களிடமிருந்து விலகிச் செல்கிறார் என்று உணர்ந்துகொள்ள முடிந்தது. மிகவும் கதறி அழுது கொண்டேயிருந்தது மட்டும் ஞாபகத்தில் உள்ளது. ஆச்ரமத்தில் அன்பர்களுக்குத் தனியாக அறைகள் ஒதுக்கப்பட்டபோது தனக்கு எந்த அறையும் வேண்டாம் என்று கூறிவிட்டுதான் முதன்முறையாக பகவானைத் தரிசனம் செய்த The Gentlemen Guest House-ல் ஒரு சிறிய இடத்திலே வாழ்ந்து வந்தார்.

1972-ஆம் ஆண்டு முதல்முறையாக கார்த்திகை தீபத்திற்காக திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமம் சென்றிருந்தோம். அந்த முறைதான் முருகனாரை முதல்முறையாக தரிசிக்க வாய்ப்பு கிடைத்தது. பல்வேறு நாட்டினைச் சேர்ந்த மக்கள் தியான அறையில் பகவானின் படத்தின் முன் அமைதியாக அமர்ந்திருப்பதை முதன்முறையாக பார்ப்பதால் மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அதைப் பார்த்த எங்கள் தாத்தா இங்கு இது மிகவும் சாதாரணமான விஷயம் என்று கூறினார். மேலும் அந்தமுறை தான் மலைஉச்சி வரை சென்று தீப ஏற்றும் இடத்தைத் தரிசிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

கோசாலையில் மாடுகளைப் பராமரிப்பது, தோட்ட வேலைகள் மற்றும் விபூதி, குங்குமம் மடிப்பது என்று பல கைங்கரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வார் என்று கணேசண்ணா கூறுவார். ஒருமுறை ஆச்ரம சர்வாதிகாரி நிரஞ்சனானந்த சுவாமிகள் வடுகநாதசுவாமி என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக வடிவுடையாரே வாரும் என்று கூப்பிட்டுள்ளார். அதுவே பின்னர் அவருடைய பெயராகி விட்டது. சுமார் 37 ஆண்டுகாலம் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் கைங்கர்யம் செய்து வந்துள்ளார். உடலை விடப்போகும் சில தினங்களுக்கு முன்பு விபூதி, குங்குமம் மடித்துக்கொண்டு சிரித்துக் கொண்டே யாரிடமோ பேசிக் கொண்டிருப்பதை சுந்தரண்ணா பார்த்துள்ளார். பின்னர் அவரிடமே சென்று,

“எதிரில் யாரும் இல்லையே யாரிடம் இப்படி சிரித்துக் கொண்டு பேசிக்கொண்டிருக்கீங்க!” என்று கேட்டதற்கு “நான் பகவானிடம் பேசிக்கொண்டிருக்கிறேன்” என்று கூறியுள்ளார்.

அன்று அண்ணாமலையுடன் கலக்கும் நாளும் வந்தது. அவருக்கு வழங்கப்பட்ட ஹார்லிக்ஸை குடிக்காமல் வைத்திருந்து தினமும் தவறாமல் தன்னைக் காண வரும் திரு.கணேசண்ணாவிடம் கொடுத்துள்ளார். பிறகு அவரைப் பார்த்து “தாத்தா (பகவான்) மாதிரி வருவ” என்று ஆசிர்வதித்துள்ளார். அதன்பிறகு சற்று நேரத்தில் பகவான் திருவடிகளில் கலந்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. எங்களுக்குத் தகவல் கிடைத்து சுமார் 9 மணி நேர பயணத்திற்குப் பின்பு சென்று பார்க்கும் போது அவர் உடல் கிரிவலப்பாதையில் நல்லடக்கம் செய்யப்பட்டு அனைவரும் திரும்பிவிட்டனர். அப்போது சுந்தரண்ணா கூறியது: “உங்க தாத்தா உங்கள் குடும்பத்தினரை தூக்கி வளர்த்தாரோ இல்லையோ எங்கள் அனைவரையும் நன்கு வளர்த்தார்.”

2003-ஆம் ஆண்டு திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தைச் சேர்ந்த திரு.T.V. சந்திரமௌலி அவர்கள் எங்களுடைய தாத்தாவின் கையெழுத்து பிரதி ஏதேனும் எங்களுடன் உள்ளதா என்று கேட்டிருந்தார். நான் அதைப் பற்றி கொஞ்சம்கூட யோசிக்காமல் “எங்களிடம் அப்படி ஒன்றும் இல்லையே” என்று கூறிவிட்டேன். அன்று இரவில் கனவில் பகவான் வந்தது இன்றளவும் மறக்கமுடியாதது. இதற்கு முன் ஒரு சில முறை வந்திருந்தாலும் இந்தமுறை தான் பகவான் பேசுவதைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. “உன்னுடைய தாத்தாவிற்கு நான் எவ்வளவு கொடுத்திருப்பேன் (அதாவது பரிபூரண அருள்). அதான் மௌலி கேட்கிறானே! உன்னுடைய தாத்தாவின் கையெழுத்துப் பிரதிகளைக் கொடுக்க வேண்டியதுதானே” என்றுகூறி மறைந்து விட்டார்.

மறுநாள் காலையில் நான் யாரிடமும் எதுவும் கூறாமல் எங்களுடைய கிராமத்திற்குச் சென்று எங்கள் வீட்டில் தாத்தா பயன்படுத்திய பழைய பெட்டிகளில் அவருடைய கையெழுத்துப் பிரதிகள் ஏதேனும் உள்ளதா என்று தேடிப்பார்த்தபோது ஒரு சில கையெழுத்துப் பிரதிகள் கிடைத்தது. சென்ற வேலை முடிந்தவுடன் உடனே பொள்ளாச்சிக்கு திரும்பிவிட்டேன். அந்த நோட்டில் ரமண சந்நிதிமுறையை என் தாத்தாவே கைப்பட எழுதி அதில் உள்ள எழுத்துப் பிழைகளை பகவான் ஆங்காங்கே திருத்தியுள்ளார்.

2004-ஆம் ஆண்டு, பகவான் 125-ஆம் ஆண்டு ஜயந்தி தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ரத யாத்திரையைத் துவக்கி வைக்க, அப்போதைய தலைவர் திரு.வே.சு. ரமணன் மற்றும் சுசீலா மன்னி அவர்கள் பொள்ளாச்சிக்கு வந்திருந்தனர். மதிய உணவிற்காக எங்களுடைய வீட்டிற்கு அவர்கள் வருகை புரிந்தபோது தாத்தாவின் கையெழுத்துப் பிரதிகளைப் பற்றிக் கூறியவுடன் உடனே அதை வாங்கிச் சென்று நகல் எடுத்து திருப்பித் தருவதாகக் கூறியிருந்தார். இப்போது அந்தக் கையெழுத்துப் பிரதிகள் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரம வெளியீடான 'தங்கக்கை' புத்தகத்தில் பிரசுரமாகியுள்ளது.

இதேபோல உபதேச உந்தியாரைத் தாத்தாவே எழுதி அதை பகவான் கைப்பட திருத்திய நோட்டுப் புத்தகம் ஒன்றும் என்னிடம் இருந்தது.

எப்போது திருவண்ணாமலைக்குச் சென்றாலும் ரமண நகரில் இருக்கும் திருமதி. பங்கஜாக்ஷி அம்மாவைச் சென்று தரிசிப்பது வழக்கம். சில வருடங்கள் ஏதோ ஒரு சில காரணங்களால் அவரைச் சென்று பார்க்க முடியவில்லை. பிறகு சில ஆண்டுகளுக்குப் பிறகு சென்று பார்க்கும்போது, "பொள்ளாச்சியிலிருந்து சோபா கவுண்டர் குடும்பத்தினர் அடிக்கடி வந்து செல்வார்கள். ஏன் அவர்களைச் சில ஆண்டுகளாகக்

*காண முடியவில்லை” என்று எங்களிடமே கூறினார். மேலும் எங்களை ஒருமுறை அறிமுகப்படுத்திக் கொண்ட போது அந்தம்மா கூறிய வாக்கியம், “உங்க தாத்தா ஆலமரமாச்சே, வேர் விடத்தானே செய்யும். அத்துடன், தான் தினமும் வீட்டில் தனிமையில் அக்ஷரமணமாலை பாராயணம் செய்யும்போது கூடவே ஒரு ஆண் குரல் கேட்கிறது. அது பகவானைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?” என்று கூறினார். எங்கள் இரு குடும்பத்தையும் இணைத்து எங்கள் திருமணத்திற்கு அவர் எழுதிய வாழ்த்து மடல் இன்றும் புதுப்பாளையம் சோபா கவுண்டர் சமாதி வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இன்றளவும் பங்கஜாக்ஷி அம்மா அவர்கள் குஞ்சு சுவாமிகளின் நினைவுகளைத் தொகுத்தளித்த ‘எனது நினைவுகள்’ புத்தகத்தையே மீண்டும் மீண்டும் படித்து இன்புறுகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.*

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 125-ஆம் ஆண்டு ஜயந்தி தின விழாவை முன்னிட்டு ரமண ரத யாத்திரை தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா, கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களிலும் நடைபெற்றதை ரமண அன்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அப்படி பொள்ளாச்சியில் ரமண ரதமானது நகரின் மையப்பகுதியில் இருக்கும் 1000 ஆண்டுகள் பழமையான சுப்ரமணியர் சுவாமி கோவிலில் நடைபெற்றதால் அந்த ஆண்டு முதல் பொள்ளாச்சி ரமண சத்சங்கம் ஒவ்வோரு வார ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.00 மணியிலிருந்து 8.00 மணி வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இது எந்த ஒரு தனி மனித முயற்சியால் அல்லாமல் பரிபூரண பகவான் ரமணரின் கருணையால் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கிறது .*

***அன்போடுன் நாமம்கேள் அன்பர்தம் அன்பருக்கு***
***அன்பன்ஆயிட அருள் அருணாசலா!!***

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### அண்ணாமலை நோக்கி பாதயாத்திரை

*"உண்ணாமுலை உமையாளொடு உடனாகிய அண்ணாமலையைத் தொழுவார் வினை வழுவா வண்ணம் அறும்" என்பது உறுதி. அந்த நம்பிக்கை வீண்போகாது. திண்டிவனம் துவங்கி மேல்பேரடிக்குப்பம், வெங்கந்தூர், அழகியநல்லூர் மற்றும் தீவனூர் என்பதாக சுமார் 500 அண்ணாமலை அன்பர்கள், பக்தர்கள் ஆண், பெண், குழந்தைகள் என்பதாக சாரிசாரியாக கடந்த 10 வருடங்களாக காலடிப் பயணமாக அண்ணாமலையை நோக்கி மாலை அணிந்து ஆடிப்பாடி அண்ணாமலையைக் கைதொழுத வண்ணம் பிரார்த்தனையைச் செலுத்தி வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும், "பொன் உருகக் காயும் மண் உருகப் பெய்யும்" என்ற பழமொழிக்கு உரித்தான புரட்டாசி மாதத்தின் இரண்டாம் வாரத்தில் புறப்பட்டு இடையில் கீழ்பென்னாத்தூரில் இரவு தங்கி, மறுநாள் காலை அண்ணாமலையை அடைந்து, கோவில் தரிசனத்திற்குப் பின்னர் கிரிவலத்துடன் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றிவருகிறார்கள். இந்தக் குழுவின் தலைமை அண்ணாமலையார் என்றே நோட்டீஸ் அடித்துள்ளார்கள். எனினும் இதற்கான ஒருங்கிணைப்பாளர் அழகியநல்லூர் சிவன் கோவில் நிர்வாகி சிவா கே காத்தவராயன் அவர்கள். மற்றும் வழிநெடுக இதற்கு ஆதரவாக செயல்படுபவர்கள் என திருவாளர்கள் வடிவேலு, பாலையா மற்றும் பலர் உள்ளனர்.*

*இக் கிராமத்து பாமரர்கள் இந்த யாத்திரை மேற்கொள்ளுவதால் வாழ்க்கை அமைதியாக உள்ளதாகக் கூறுகிறார்கள். இவர்களின் பக்தி சிறக்க அண்ணாமலையாரை ரமணோதயம் வேண்டிக்கொள்கிறது.*

### ஸ்ரீமுருகனார் 48-ஆவது ஆராதனை

*பகவான் ஸ்ரீ ரமண மகர்ஷிகளின் தலையாய அடியவர்களில் ஒருவரான முருகனார், பகவானைத் தவிர*

*வேறெந்தத் தெய்வத்தையும் பாடியறியாதவர். முருகனார், 28-8-1973 ஆவணி அமாவாசை அன்று ஸ்ரீ பகவான் திருவடிகளில் கலந்தார். அவரது சமாதி ஆச்ரம வளாகத்தினுள் அமைந்துள்ளது.*

*ஸ்ரீமுருகனாரது ஆராதனை ஒவ்வொரு வருடமும் ஆச்ரமத்தில் சிறப்பாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு முருகனாரது 48-ஆவது ஆராதனை 6-9-2021 திங்கட்கிழமை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்பட்டது. தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலையால் அபிஷேக ஆராதனைகளுடன் எளிமையாகக் கொண்டாடப்பட்டது.*

*இராமநாதபுரத்தில் முருகனார் பிறந்த இல்லம், அவரது நினைவகமாக "ஸ்ரீமுருகனார் மந்திரம்' என்ற பெயரில் வடிவமைக்கப்பட்டு, ரமண பக்தர்கள் வணங்கும் ஒரு புனிதத் தலமாக விளங்கிவருகிறது. திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்சிரமத்திற்கு பாத்தியப்பட்ட இந்த இடத்தில் அன்று சிறப்புப் பாராயணம், பூஜைகளுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. கலந்துகொண்ட அனைவர்க்கும் மற்றும் ஏழை எளியவர்க்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீ ரமணாஸ்ரம தரிசன நேரங்கள்

*கொரோனாவை முன்னிட்டு தமிழக அரசின் வழிகாட்டுதலைப் பின்பற்றி ஆச்ரமத்திலும் திங்கள் முதல் வியாழன் வரை மட்டுமே தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டு இருந்தது. தற்போது தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட புதிய தளர்வுகளைக் கருத்தில்கொண்டு அக்டோபர் 15 முதல் அனைத்து நாட்களும் காலை 8 மணி முதல் 11 மணி வரையிலும் மதியம் 2 முதல் 5 மணிவரையிலும் பக்தர்களின் தரிசனத்திற்காக ஆச்ரமம் திறந்திருக்கும். பௌர்ணமி தினத்தன்று தர்சன அனுமதி கிடையாது.*

# ரமண கேந்திர செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், சென்னை

*தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட புதிய தளர்வுகளைக் கருத்தில்கொண்டு இனி அனைத்து நாட்களும் பக்தர்களின் தரிசனத்திற்கு ரமணர் திருக்கோயில் திறந்து இருக்கும் .*

*நேரம் : காலை 08.00 முதல் மதியம் 12.30 வரை.*

*மாலை 04.00 முதல் இரவு 07.30 வரை .*

## ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை

*தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட புதிய தளர்வுகளைக் கருத்தில் கொண்டு இனி அனைத்து நாட்களும் பக்தர்களின் தரிசனத்திற்கு ரமணர் திருக்கோயில் திறந்து இருக்கும் .*

*நேரம் : காலை 08.00 முதல் மதியம் 12.30 வரை.*

*மாலை 05.30 முதல் இரவு 07.30 வரை .*

# நினைவில் நின்றவர். . .

## ஸ்ரீ டி.எஸ். நாகராஜன்

*ஸ்ரீ டி.எஸ். நாகராஜன், மே 14, 2021 அன்று, தொண்ணூற்று நான்கு வயதில், பெங்களூருவில் உள்ள தனது வீட்டில் அமைதியாகக் காலமானார்.*

*அவருடைய மாமா — தந்தையின் இளைய சகோதரர் — Dr.T.N. கிருஷ்ணசாமி, பகவானின் தீவிர பக்தர் மற்றும் அதிகாரப்பூர்வ புகைப்படக்காரர், பகவான் புலித்தோலில் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கும் ஒரு வண்ணப் புகைப்படத்தை இல்லத்திற்குக் கொண்டுவந்தார். அவ்வுருவப் படத்தால் ஈர்க்கப்பட்ட சிறுவன் நாகராஜன் வாழ்வின் இறுதிவரை அதனை மிகுந்த மதிப்புமிக்கதாகப் போற்றிவந்தார்.*

*நாகராஜன், தனது நான்காம் வயதில் அவரது தந்தை மற்றும் மாமா டி.என்.கிருஷ்ணசாமியுடன் பகவானது ஜயந்தி விழாவிற்கு அவர்களுடன் கூட்டிச்செல்ல பிடிவாதம் பிடித்து வெற்றிபெற்றார். ஆசிரமத்தை அடைந்த அவர் தியான அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பகவான் ஒரு படுக்கையில் சாய்ந்து, அமைதியாக எங்கோ தொலைதூரப் பார்வை பார்ப்பதைக் கண்டார். அவரைச் சுற்றிலும் ஜயந்தி விழாவைக் காணவந்த ஏராளமான பக்தர்கள் மற்றும் அன்பர்கள் சூழ்ந்திருந்தனர்.*



*நாகராஜன் அவர்களின் மகள் ரூபா, தந்தை பின்னாளில் எழுதியதைப் பதிவுசெய்கிறார்:*

*“இந்த முழுசூழ்நிலையும் எனக்கு, எங்களுடைய திருப்பதி பயணத்தையும் பகவானைக் கடவுளாகவும் எனக்கு நினைவூட்டியது.”*

*அதற்குப்பின் ஐம்பதுகளின் பிற்பகுதியில்தான் அவரால் மீண்டும் ஆசிரமத்திற்கு வருகை தரமுடிந்தது. பகவானது தேக தர்சனமின்றி வெறிச்சோடிய ஆச்ரமத்தினுள் அரைமனதுடன் சமாதி சந்நிதியில் நுழைந்து அமர்ந்தார் நாகராஜன். ஒரு பரந்த அமைதி மற்றும் அவரது மனம் அமைதியால் சூழப்பட்டதை அவரால் உடனே உணர முடிந்தது. இந்த அதீதமான மகத்தான அனுபவத்தில் ஒரு மணிநேரம் கழிந்தது.*

*இது ஒரு ஆழமான மற்றும் விலைமதிப்பற்ற பகவானது அருளானுபவம். இந்த அனுபவத்தை அவர் தனது மாமா டாக்டர் டி.என். கிருஷ்ணசாமியிடம் கூறியவுடன், அவரும் இதேபோன்று மகத்தான அமைதியை அனுபவித்ததாகக் கூறிய அவர், மேலும் “‘நான் எங்குப் போக முடியும்? நான் எப்போதும் இங்கேயே இருப்பேன்’ என்று பகவான் கூறினாரில்லவா!” என்றார்.*

*பல முன்னணி நிறுவனங்களில் பணிசெய்த நாகராஜன் அவர்களின் பிற்கால வாழ்க்கை ஆன்மீக விஷயங்களை மையமாகக் கொண்டது. அவரது குடும்பத்தாரைச் சந்திக்க புதுச்சேரி செல்லும் சமயங்களிலெல்லாம் வழியில் ஸ்ரீரமணாச்ரமத்தில் பகவான் சந்நிதி தரிசனம் செய்வார்.*

*70 ஆண்டுகளுக்கும் மேலான மணவாழ்க்கையில் உடனிருந்த அவரது மனைவி சுசீலா, நாகராஜன் இறந்த ஆறு நாட்கள் கழிந்து அருணாசல ரமண பதமடைந்தார்.*

*இத்தம்பதியருக்கு ரூபா மற்றும் ரீட்டா என்ற இரண்டு மகள்கள் உள்ளனர்.*

# பிரும்மஸ்ரீ செந்தில்நாத கனபாடிகள்



'தோன்றின் புகழொடு தோன்றுக' என்ற தெய்வப்புலவர் வள்ளுவரின் வாக்குக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்ந்த ஸ்ரீரமணாச்ரம வேதபாடசாலை அத்யாபகரும் நித்ய அக்னிஹோத்ரியுமான திரு. செந்தில்நாத கனபாடிகள் அருணாசல ரமண பதமடைந்தார். அன்னாருக்கு வயது 48. கடந்த ஒரு வருட காலமாகவே உடல்நலம் குன்றியிருந்த அவர் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் கடந்த அக்டோபர் 1-ஆம் தேதியன்று மதியம் சத்குரு ரமணருடைய சரணாரவிந்தத்தை அடைந்தார்.

1973-ஆம் வருடம் காவனூரில் பிறந்த கனபாடிகள் தனது எட்டாம் வயதுவரை கல்கத்தாவில் வளர்ந்துவந்தார். பின்னர் காஞ்சி மஹாபெரியவா ஆக்ஞையின்படி பெங்களூர் மஹாலிங்க கனபாடிகளிடம் யஜுர் வேதஅத்யயனத்தைத் தொடங்கினார். பிறகு கனபாடம் அத்யயனம் செய்வதற்காக திருப்பதி கண்ணன் கனபாடிகளிடம் சேர்ந்து, ஸலக்ஷண கனாந்தத்தைப் பூர்த்தி செய்தார். அதன்பிறகு கல்கத்தாவில் இரண்டு வருடங்கள் வேதபாராயணம் செய்து கொண்டிருந்தார். பின்னர் கேரளாவில் பாலக்காடில் உள்ள பாடசாலையில் அத்யாபகராகச் சேர்ந்து, ஆறுவருடங்கள் வேதஅத்யயனம் செய்வித்ததோடு மட்டுமல்லாது அதனைப் புகழ்பெற்ற பாடசாலையாகவும் மாற்றினார்.

*இவரது திருமணம் 2001-ஆம் ஆண்டு நடைபெற்றது. அவரது சஹதர்மிணி ஸ்ரீமதி. அகிலாண்டேஸ்வரி அவரது வாழ்வின் இறுதிவரை வேதகார்யங்கள் அனைத்திலும் அவருக்கு உறுதுணையாக நின்றார் என்றால் அது சற்றும் மிகையல்ல!*

*கல்கத்தாவில் வசித்துவந்த அவரது தந்தையார் பகவான்மீது பெரும் ஈர்ப்பு கொண்டவர். அதன்பொருட்டு ஸ்ரீரமணாச்ரம வேதபாடசாலை ஆசிரியராகப் பணி மேற்கொள்ள உத்தேசித்து 2002-ஆம் ஆண்டு ஸ்ரீரமணாச்ரமம் வந்து பாடசாலை அத்யாபகரானார். அந்த வருடமே அவரது குடும்பத்தினரும் அருணாசல வாசியானார்கள். அவரது தந்தையாரும் அவ்வருட இறுதியில் கல்கத்தாவைவிட்டு நீங்கி திருவண்ணாமலை வந்து அவருடனே நிரந்தரமாக வசிக்கத் தொடங்கினார்.*

*கனபாடிகள் ஆச்ரம வைதீகக் காரியங்களிலும், பூஜை விழாக்களிலும், பாராயணங்களிலும் மிகுந்த சிரத்தையுடனும், ஈடுபாட்டுடனும் பங்கேற்று வந்தார். ஆச்ரமத்திற்கு வருகைதரும் அனைவரும் அந்தப் புன்னகை ததும்பும் திருநீறணிந்த வசீகர வதனத்தையும் மற்றும் கணீர்க் குரலையும் பகவான் சந்நிதியிலும், ஜயந்தி, ஆராதனை, நவராத்திரி மற்றும் அனைத்து ஆச்ரம விழாக்களிலும் நிச்சயமாகக் கண்டும் கேட்டும் இருக்கலாம்.*

*கார்த்திகை தீபத் திருவிழா சமயங்களில், தன் மனைவி அகிலாண்டேஸ்வரியுடன் சேர்ந்து, திருவண்ணாமலை சங்கர மடத்தில் 2008 முதல் 2020வரை சதுர் வேதபாராயணம், உபன்யாஸம், பஜனைகள் நடத்தி வந்தார். மேலும் ஆச்ரமத்திலும் வேதபாராயணங்கள் மேற்கொண்டு, சிறப்புற நடத்திவந்தார். ஆண்டுதோறும் பிற வேதபாடசாலை மாணவர்களை ஆச்ரமத்திற்கு வரவழைத்து, தேர்வுநடத்தி, ஆச்ரம சான்றிதழ்களை வழங்கும் பணியையும் செவ்வனே மேற்கொண்டு வந்தார்.*

*கனபாடிகளின் தந்தையாரும் அருணாசல க்ஷேத்திரத்தில் சில ஆண்டுகளுக்குமுன் அருணாசல பதமடைந்தார்.*

*கனபாடிகளின் இரு குமாரர்களும் வேத அத்யயனம் செய்துள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மற்றும் அவரது இரு தம்பிகளும் வேத பண்டிதர்கள். அவரது மூத்த சகோதரர் ஸ்ரீ தத்வமஸி கனபாடிகள் திருச்சி பாடசாலையில்*

*அத்யாபகராகப் பணிபுரிந்து வருகிறார். இளைய சகோதரர் ஸ்ரீஷடக்க்ஷர கனபாடிகள் (சபரி) தற்போது ஆச்ரம பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.*

*பண்டரிபுரம் பாண்டுரங்க விட்டலனின்மீது பெரும் ஈடுபாடு கொண்ட கனபாடிகள் வருடந்தோறும் அங்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தான் மட்டும் அருளைப் பெறவேண்டும் என்னும் எண்ணமின்றி, மற்ற அன்பர்களையும் உடன் அழைத்துச்சென்று பண்டரிநாதனின் தரிசனத்தை மேற்கொள்ள வைப்பார்.*

*காஞ்சி சங்கரமட பெரியவாளின்மீதும், சிருங்கேரி மடாதிபதி, பரனூர் அண்ணா, மற்றும் முரளீதரஸ்வாமிகள்மீதும் பக்தியும் மரியாதையும் கொண்டவர். அவர்களும் இவர்மீது மிகுந்த வாஞ்சையும் மதிப்பும் கொண்டிருந்தனர்.*

*இவரிடம் பயின்ற பல மாணவர்கள் தற்போது பல இடங்களிலும் நல்ல நிலைமையில் இருக்கின்றனர். காஞ்சிபுரத்தில் வேத பரீக்ஷைக்காக தன்னுடைய மகன்போல் அவர் கருதிய இரண்டாவது தம்பியை கடும்தேர்வுகளுக்கிடையே Super First Class வாங்கும்படி தயார் செய்தார். மேலும் பல வித்யார்த்திகளை வேதத்தில் சிறந்த வித்வான்களாக்கினார். அவர்களில் பெரும்பாலோர் அன்னாரது இறுதிக் கார்யங்களில் பங்கேற்க எங்கிருந்தெல்லாமோ புறப்பட்டு திருவண்ணாமலை வந்தனர் என்பது அவர்களுக்கு கனபாடிகளின்மீது இருந்த மரியாதையைக் காட்டுகிறது என்றால் அது மிகையல்ல.*

*27 ஏப்ரல் 2018 அன்று ஆதானம் செய்துகொண்டு நித்ய அக்னிஹோத்ரம் முதலிய அனுஷ்டானங்களைச் செய்துவந்தார். திருமணம் ஆன முதல் நாளிலிருந்து கடைசிவரையிலும் நாள்தவறாமல் ‘ஔபாசனம்’ என்னும் அக்னிக் கார்யத்தை சஹதர்மினியுடன் இணைந்து செய்து கொண்டிருந்தார்.*

*அன்னாருக்கு மனைவி அகிலாண்டேஸ்வரி, இரண்டு குமாரர்கள் — விரூபாக்ஷன் மற்றும் புரந்தரன் — மற்றும் பவதாரிணி என்னும் மகள் உள்ளனர். அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தாருக்கும், அவரிடம் பயின்ற வேதவித்யார்த்திகளுக்கும், ‘ரமணோதயம்’ தனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், | | |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | ........ | 9444261296 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | ........ | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ......04522348157/2346102 | |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| ***திண்டுக்கல்*** ரமண பாரதி | ......... | 9994042091 |
| ***பூண்டி*** மாரியப்பன் | ......... | 9486576687 |

Ramanodhayam — Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



6/9/2021 ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் நடைபெற்ற முருகனார் ஆராதனை



நவராத்திரி விழா (2021) அலங்காரத்தில் அன்னை யோகாம்பாள் – ஸ்ரீ ரமணாச்ரமம்

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

